வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 11.05.2022 புதன்கிழமை | இதழ் : 156 | பக்கங்கள் : 16

# சொத்துக்களை சேதப்படுத்துவோரை சுடுவதற்கு முப்படைக்கும் உத்தரவு!

கொழும்பு, மே 11

பொதுச் சொத்துக்களை சூறையாடுவோர், தனிநபர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துபவர்களை சுடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு முப்படையினருக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

15

## நாட்டில் தொடர்கிறது வன்முறை:

- 9 பேர் உயிரிழந்தனர்
- 250 பேருக்கு காயங்கள்
- 88 வாகனங்கள் நாசம்
- 38 வீடுகள் தீக்கிரை!
- 101 வீடுகள்மீது தாக்குதல்

கொழும்பு, மே 11

காலிமுகத்திடல் தாக்குதலைத் தொடர்ந்து நாடு முழுவதும் பரவிய வன்முறைகளில் நேற்று மதியம்வரை 9 பேர் உயிரிழந்தனர். 250இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஆளும் கட்சியைச் சேர்ந்த 103 பேரின் சொத்துக்கள் அடித்துடைக்கப் பட்டன - சூறையாடப்பட்டன. இதில், முன்னாள் அமைச்சர்கள், அரசியல்வாதி

15

## உடைக்கப்பட்டது ராஜபக்ஷ சிலை!



கொழும்பு, மே. 11

அம்பாந்தோட்டை - தங்காலையில் அமைக்கப்பட்டிருந்த, டி.ஏ. ராஜபக்ஷவின் உருவச்சிலை அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களால் நேற்று கட்டி இழுத்து வீழ்த்தி உடைக்கப்பட்டுள்ளது.

15

## இந்திய இராணுவத்தை இலங்கையில் களமிறக்குமாறு கோருகிறார் சுவாமி

புதுடில்லி, மே. 11

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர்களின் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

15

## அமைதிக்கு திரும்புங்கள்

### கர்தினால் ரஞ்சித், சோபித தேரர் மக்களிடம் கூட்டாகக் கோரிக்கை!

கொழும்பு, மே 11

நாட்டில் நிலவும் வன்முறைகள் அமைதிக்கு திரும்ப வேண்டும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, வண. ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் கூட்டாக மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று ஊடகங்களிடம் கருத்து

15

## அதிபர்கள், ஆசிரியர்கள் பணிப் புறக்கணிப்பில்!

யாழ்ப்பாணம், மே 11

அதிபர், ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள். இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் சமயோசிதமாக செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று இலங்கை

15

## நாட்டில் இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்படலாம்!

### சந்திரிகா எச்சரிக்கை



கொழும்பு, மே. 11

தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் இராணுவ ஆட்சி அமுல்படுத்தப் படும் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க எச்சரித்துள்ளார்.

15

## முல்லை கடலில் நீராடிய 3 சகோதரர்கள் மாயம்!

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு - செம்மலை கடலில் நீராடிய ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சகோதரர்கள் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

நேற்று மதியம் இந்தத் துயர சம்பவம் பதிவானது. இதில், அளம்பில் பகுதியை சேர்ந்த பத்மநாதன் கிளின்ரன் (29) பத்மநாதன் விசித்திரன் (24) பத்மநாதன் விழித்திரன் (22) ஆகியோரே காணா

15

## கட்சி தலைவர்கள் கூட்டம் ரத்து பாராளுமன்றமும் கூட்டப்படாது!

### சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, மே 11

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை பாராளுமன்றம் கூட்டப்படாது என்று சபாநாயகர் அறிவித்துள்ளார்.

15

## தவறான வழியில் சென்ற மஹிந்த நந்திக்கடலாக மாறியது பேரவாவி!

### சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 11

“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைதியான முறையில், கௌரவமாக பதவி விலகி இருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. தவறான வழியை தேர்ந்தெடுத்துவிட்டார். அதன் விளைவாகவே பேரவாவி, நந்திக்கடலாக மாறியது.”

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு

15

## கீரி கடித்ததால் பெண் மரணம்!

வடமராட்சி, மே 11

கீரி கடிக்கு உள்ளான வயோதிப பெண் 3 மாதங்களின் பின் உயிரிழந்தார். அவரின் உயிரிழப்புக்கு நீர்வெறுப்பு நோய் காரணம் என்று மருத்துவ அறிக்கையிட்டுள்ளது. இந்நிலையில் அதனை உறுதிப்

15

## பழிவாங்கலை விடுத்து அமைதி பேணுங்கள்!

### ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, மே 11

பழிவாங்கும் நோக்கத்துடனான வன்முறைகளை நிறுத்தி, அமைதியைப் பேணுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியலமைப்பிற்கு அமைவாக நாட்டில் மீண்டும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கான

15

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவரின் உயிரை எப்போது எடுப்பது என்பதை தீர்மானித்து அவர் உயிரை எடுப்பவர் எமதர்மராசர்.

எமதர்மன் இந்த மாதத்திற்கான பட்டியலுடன் சுப்பிரமணியத்தார் வீட்டுக்கு சென்றார்.

வீட்டுக்கு வந்தவரை வரவேற்று உபசரித்து, நல்ல சாப்பாடும் கொடுத்து வரவேற்றார் சுப்பிரமணியத்தார்.

சாப்பிட்ட களைப்பில் எமதர்மராசர், சின்ன தூக்கம் கொண்டு எழும்பலாம் என்று மணியத்தாரின் வீட்டு வாங்கிலில் தூக்கம்போடத் தொடங்கிவிட்டார்.

இந்த நேரமாகப் பார்த்து, அவர் அருகிலிருந்த பட்டியலில் முதலாவதாக இருந்த தனது பெயரை அழித்துவிட்டு, கடைசியில் அதாவது, ஒரு மாதத்தின் பின்னர் கடைசி ஆளாக தனது பெயரை எழுதி வைத்துவிட்டார் சுப்பிரமணியத்தார்.

ஆகக்குறைந்தது இன்னும் ஒரு முப்பது நாள்களாவது உயிர்வாழலாம் என்ற நப்பாசைதான் அவருக்கு.

உண்ட களைப்பில் நன்றாக தூங்கி எழும்பிய எமதர்மராசர் மணியத்தாரிடம் சொன்னார்,

'வந்த இடத்திலை நல்ல தண்ணி, சாப்பாடு எண்டு கவனிச்சிட்டாயடாப்பா, உனக்கு ஒரு சின்ன உதவி செய்யலாம். இண்டைக்கு, பட்டியலை கடைசியிலிருந்து தொடங்குறன்... நீ இன்னும் கொஞ்ச நாளைக்காவது உயிரோட இரு' - என்று.

இப்போது கடையில் இருந்தது சுப்பிரமணியத்தாரின் பெயர்.

ஒரு நகைச்சுவைக்காக சொல்லப்படுகின்ற இந்தக் கதை சொல்கின்ற சங்கதி, எது நடக்கவேண்டுமோ அது நடக்கும், அதுவும் நடக்கவேண்டிய நேரத்தில் நடந்தே தீரும் என்பதுதான்.

நேற்று முன்தினம் நாட்டில் நடந்ததும் அப்படித்தான்.

நேற்று முன்தினம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவார் என்றும், தனது ஆதரவாளர்களை அலரிமாளிகைக்கு அழைத்து அவர்கள் மத்தியில் உருக்கமான உரையொன்றை நிகழ்த்திவிட்டு அவர் தனது பதவி விலகலுக்கான அறிவிப்பை விடுப்பார் என்றுமே, கடந்த ஞாயிறு நள்ளிரவு செய்திகள் சில உறுதிப்படுத்தியிருந்தன.

தனக்கு இன்னமும் மக்கள் ஆதரவு இருக்கின்றது என்பதை நாட்டு மக்களுக்கு காட்டுவதற்காக நாட்டின் பல பாகங்களிலுமிருந்து அழைத்துவரப்பட்ட அவரது தொண்டர்கள், அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட சிலரால் உசுப்பேற்றப்பட்டு, காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களோடு மோதுவதற்கு சென்றதன் பின்னணி என்ன என்பது இன்றுவரை தெரியவரவில்லை. ஆனால், அவர்களை அமைதி காக்குமாறு மஹிந்தர் கோரியிருந்தால், நிச்சயம் அவர்கள் அமைதி காத்திருப்பார்கள் என்பதும் தெரிந்ததுதான்.

ஆனால், அவர்கள் காலிமுகத்திடலில் அமைதியாக போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவர்கள்மீது வன்முறையை ஏவி தொடக்கிவைத்த வன்முறை, சில மணி நேரங்களில் அவர்களுக்கு எதிராகவே திரும்பியது.

அந்த சம்பவங்களை ஊடகங்கள் நேரலை செய்துகொண்டிருக்கையில் அதனை பார்த்துக்கொண்டிருந்தபோது, பல சம்பவங்கள் மனக்கண்ணில் படமாக ஓடின.

எண்பத்தி மூன்றில், தமிழர்களுக்கு எதிராக எப்படியொரு திட்டமிட்ட வன்முறை ஏவிவிடப்பட்டதோ அதேபோல, கண்மூடி விழிப்பதற்குள், ஒவ்வொரு காட்சிகளாக நேரலையில் ஓடிக்கொண்டிருந்ததை நேற்று முன்தினம் பாரக்க முடிந்தது.

ஒவ்வொரு மணி நேரத்துக்கு ஒருதடவை, யார் யார் வீடுகள் தீக்கிரையாக்கப்படுகின்றன என்ற தகவல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன.

மஹிந்த ஆதரவாளர்கள் காலிமுகத்திடலில் அராஜகம் புரிந்தபோது பார்த்துக்கொண்டிருந்த பொலிசாரால், அவர்களுக்கு எதிராக போராட்டக்காரர்கள் திரும்பியபோது, எதுவும் செய்ய முடியவில்லை.

மஹிந்த ஆதரவாளர்கள் காலிமுகத்திடலில் அராஜகம் பண்ணியபோது, பொலிசார் அதனைத்தடுக்க நினைத்திருந்தால், பின்னர் ஆளும்தரப்புக்கு எதிராக போராட்டக்காரர்கள் தாக்குதல் நடாத்தியபோதும் அதனை தடுக்க தமது பலத்தை பிரயோகித்திருந்தாலும் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.

இந்தச் சம்பவத்தை எண்பத்திமூன்றில் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட திட்டமிட்ட கலவரத்துடன் எதற்காக ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்று கேட்கலாம். உண்மைதான், அது எவ்வாறு முன்னரே காடையர்களால் யார்யார் வீடுகள், தமிழர்கள் வீடுகள், எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று தெரிந்து வைத்துக்கொண்டு, தாக்குதல் நடாத்தப்பட்டதோ அதுபோலவே நேற்று முன்தினமும் நடந்த சம்பவங்களைப் பார்க்கின்றபோது எண்ணத் தோன்றியது.

மக்கள் தன்னெழுச்சியாக தாக்குதல் நடாத்தினார்கள் என்றால், இன்று நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பி.க்களின் வீடுகள் தீக்கிரையாகியிருக்கவேண்டும். ஏராளமான உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் வீடுகள் தரைமட்டமாகியிருக்கவேண்டும்.

ஆனால் நடந்தது, குறிப்பிட்ட சிலரின் வீடுகள் மாத்திரமே குறிவைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தாக்குதலுக்குள்ளானவையும், ஏதோ ஒருவகையில் மஹிந்தவோடு நெருக்கமாக இருந்தவர்கள். அல்லது, தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்று பரவலாக மக்களால் தெரிவிக்கப்பட்டு வந்தவர்கள் வீடுகளே.

- ஊர்க்குருவி

# மஹிந்த நாட்டை விட்டு வெளியேறவே மாட்டார்!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, மே 11

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேற மாட்டார் என அவரின் மகனும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் விலக மாட்டார் என்றும் சர்வதேச ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் நாமல் தெரிவித்தார்.



மஹிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறும் நோக்கில் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளமொன்றில் பாதுகாப்பாக தங்கியுள்ளதாக தெரிவித்து, அந்தக் கடற்படைத் தளம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே நாமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாங்கள் யாரும் நாட்டை விட்டு தப்பியோடமாட்டோம். இது தொடர்பாக அதிக பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன என்றும் நாமல் கூறியுள்ளார். (ஐ)

## பெரமுன எம்.பியின் வீட்டை தாக்க வந்தவர்களை விரட்டிய மக்கள்!

கொழும்பு, மே 11

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவலவின் வீட்டை ஒரு குழுவினர் தாக்க வந்த போது, கிராம மக்கள் அவரது வீட்டை பாதுகாத்துள்ளனர்.

பண்டாரகமவில் உள்ள வீட்டை தாக்குதவற்கு நேற்று முன்தினம் ஒரு குழுவினர் அணிதிரண்டு வந்துள்ளனர்.

இந்த தகவலை அறிந்த, கிராம மக்கள் ஒன்று திரண்டு, லலித் எல்லாவலவின் வீட்டிற்கு பாதுகாப்பு அளித்தனர். சுமார் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இவ்வாறு ஒன்றுகூடியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் பொல்லுகளுடன் தாக்குதல் நடந்த வந்த குழுவினர், பொதுமக்கள் திரண்டு எதிர்ப்பு தெரிவித்ததால் திரும்பிச் சென்றுள்ளனர்.

கிராம மக்களும் மற்றவர்களும் எம். பியின் வீட்டின் அருகே இரவு வரை தங்கி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

லலித் எல்லாவல பொதுஜன பெரமுன சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவானார். அண்மையில், பெரமுனவில் 10 பின்வரிசை உறுப்பினர்கள், இடைக்கால அரசு அமைய வேண்டுமென ஜனாதிபதியை வலியுறுத்தி வந்துள்ளனர். அவர்களில் லலித் எல்லாவலவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையின் மீட்சிக்கு இந்தியா உறுதியளிக்கும்

புதுடில்லி, மே 11

இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு முழு ஆதரவளிப்பதாக இலங்கை மக்களுக்கு தனது உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இலங்கையின் நெருங்கிய அயல் நாடான இந்தியா, வரலாற்று உறவுகளுடன், அதன் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு முழுஆதரவளிக்கிறது"

எமது கொள்கைக்கு இணங்க, இலங்கை மக்களுக்கு அவர்களின் தற்போதைய சிரமங்களை சமாளிக்க உதவுவதற்காக இந்தியா இந்த ஆண்டு மாத்திரம் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான ஆதரவை வழங்கியுள்ளது.

மேலும், உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையைத் தீர்க்க இந்திய மக்கள் உதவி வழங்கியுள்ளனர் என்றுள்ளது. (ஐ)

# வன்முறையில் கைதிகள் பங்குகொள்ளவே இல்லை

## சிறைச்சாலை ஊடக பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, மே 11

கொழும்பில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களில் கைதிகளின் பங்கேற்பு குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம் விளக்கமளித்துள்ளது.

வட்டரெக்க திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் உள்ள கைதிகளும் தாக்குதல் நடத்தியவர்களில் ஒரு பகுதியினர் என்று கூறப்படும் செய்திகளைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க மறுத்துள்ளார்.

சிறைச்சாலை திணைக்களத்தின் வழமையான புனர்வாழ்வு வேலைத்திட்டத்தின் கீழ் 3 கட்டுமான தளங்களில் புனர்வாழ்வு பணிகளுக்காக வட்டரெக்க சிறைச்சாலையில் இருந்து 181 கைதிகள் சிவில் உடையில் கொண்டுசெல்லப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த கைதிகள் கொள்ளுப்பிட்டி, ராஜகிரிய மற்றும் பத்தரமுல்லை ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு திரும்பும்போது பொதுமக்களால் தாக்கப்பட்டதாக சந்தன ஏக்கநாயக்க கூறினார்.

நேற்று முன்தினம் மாலை தலஹேன பகுதியில் கைதிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸில் இருந்து பொதுமக்கள் அப்புறப்படுத்தியதாகவும், அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அவர் கூறினார்.

இலங்கை பொதுஜன பெரமுன தலைமையிலான கொழும்பில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களில் கைதிகள் அங்கம் வகித்தவர்கள் என நினைத்து பொதுமக்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

புனர்வாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டுமானப் பணிகளுக்கு அனுப்பப்பட்ட 181 கைதிகளில் 58 கைதிகள் தற்போது காணாமல் போயுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதிகள் யாரேனும் உதவிக்காக தம்மை அணுகினால் அவர்களுக்கு உதவுமாறும் அவர்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும் சந்தன ஏக்கநாயக்க பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.05.2022 புதன்கிழமை
பிலவ வருடம், சித்திரை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கொழும்பு நெருக்கடியும் பாரபட்சங்களின் சாட்சியும்?

கொழும்பு நெருக்கடி இன்னும் ஓயவில்லை. கோட்டா கோ ஹோம் - போராட்டக்காரர்கள், காலிமுகத்திடலில் நிலைகொண்டிருக்கும் வரையில், இலங்கையின் நெருக்கடி ஏதோவொரு வகையில் காட்சிப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும். தற்போது, குறித்த பகுதியில், தங்களது போராட்டத்தின் அடையாளமாக, நினைவுத் தூபியொன்றை நிறுவும் பணியில் போராட்டக் காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற மக்கள் கலகங்களின் விளைவாக, ஆளும் பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதிகள் பலரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் மெதமுதன வீடு, மற்றும் டி. ஏ. ராஜபக்ஷ நினைவிடம் ஆகியவும் தீக்கிரையாக்கப்பட்டிருக் கின்றன. உண்மையில் இந்த வன்முறைகள் அனைத்துக்கும் மூலகாரணம் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அடியாட்கள்தான். அவர்கள் காலிமுகத்திடல் அமைதி போராளிகளை தாக்க முற்பட்டதன் விளைவாகவே, நிலைமைகள் மிகவும் குறுகிய நேரத்தில் தலைகீழானது. மக்கள் தன்னிச்சையாக வீதி களில் இறங்கினர். பொலிஸாரும் தாக்கப்பட்டனர்.

சிங்கள மக்கள் அரசியல்வாதிகளை தாக்குகின்றனர் - அவர்களது உடைமைகளை எரிக்கின்றனர். கோபம் கொண்ட மக்கள் உலகெங்கும் இப்படித்தான் போராடியிருக்கின்றனர். இதற்கு மிகவும் சமீபத்தைய உதாரணம், அமெரிக்காவில் இடம்பெற்ற கறுப்பின மக்களின் போராட்டமாகும். ஒரு பொலிஸாரின் அத்துமீறலால் ஒரு கறுப்பினத்தவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்காவில் வன்முறைகள் வெடித்தன. பொதுச் சொத்துக்கள் பல தீக்கிரையாக்கப்பட்டன. ஆனால், இலங்கையில், ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் அத்துடன், ஏனைய அரசியல்வாதிகளும் இலக்கு வைத்துத் தாக்கப்படுகின்றனர்.

மக்கள் தங்களுக்குத் தெரிந்த வழியில்தான் செயல்படுவார்கள். தெரிந்த வார்த்தைகளின் வழியாகத்தான் பேசுவார்கள். அப்படித்தான் இப்போது - பொருளாதார சுமைகளால், மோசமாகப் பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள் வீதிகளுக்கு வந்திருக்கின்றனர். இதே மக்கள்தான், சிங்கள ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம், அவர்களின் அரசியல் ஆதாயத்துக்காக, தமிழ் மக்களுக்கு எதிராகவும் தூண்டிவிடப்பட்டவர்கள். கிட்டத்தட்ட 1983 - தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளின்போது, எவ்வாறான அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டதோ, அதையே, இப்போது, சிங்கள அரசியல்வாதிகளுக்கு எதிராக செய்கின்றனர். மஹிந்தவின் ஆதரவாளர்களை, அரை நிர்வாண மாக்கி, வீதிகளில் கட்டிவைத்திருக்கின்றனர்.

ஆனால், இந்த வன்முறைகளும், கலகங்களும் பிறிதொரு விடயத்தையும் துல்லியமாக காட்சிப்படுத்தியிருக்கின்றது. அதாவது, இந்த நாட்டின் பொலிஸ் மற்றும் படைத்துறைகள் எந்தளவு இன மயப்படுத்தப்பட்டிருக்கின்றது - என்னும் உண்மையும் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது. சிங்கள மக்கள் கோபம் கொண்டு வெளியில் வந்திருப்பதை அமைதியாக பார்த்துக் கொண் டிருக்கும் சிறீலங்கா பொலிஸ், படைத்துறைகளும், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் தங்களின் கோபங்களை அமைதிவழியில் வெளிப்படுத்தும்போது, இவ்வாறு நடந்துகொள்வதில்லை.

அச்சுறுத்தல், மறைமுகமான மிரட்டல்கள் மூலம் மக்களின் போராட்டங் களை அடக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். ஆனால், சிங்கள மக்களின் எழுச்சியென்று வருகின்றபோது, சிங்களபொலிஸ், சிங் கள படைத்துறையாகவே அவர்கள் மாறிவிடுகின்றனர். ஏனெனில், ஆவேசம் கொண்டு, வீதிகளில் இறங்கியிருக்கும் சிங்கள மக்கள் மீது எவரும் பயங்கரவாத முத்திரை குத்தவில்லை. ஏனெனில், அது முடியாது.

ஆனால், இதுவே தமிழர்கள் என்றால் - உடனடியாகவே தமிழ் இளை ஞர்கள்மீது, பயங்கரவாத முத்திரைகள் பாய்ந்திருக்கும். இன்று, காலி முகத்திடலில் நினைவுத் தூபியை சிங்கள இளைஞர்கள் நிர்மாணிக்க முயற் சிக்கின்றனர். அதனை படைத்துறைகள் பார்த்துக் கொண்டிருக்கப் போகின் றன. ஆனால், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஒரு நினைவு தூபியை நிறுவியபோது, ஆட்சியாளர்கள் எவ்வாறு நடந்து கொண் டனர். பல்கலைக்கழக நிர்வாகம் இரவோடு இரவாக, நினைவு தூபியை, அகற்றியது.

# ராஜபக்ஷ 'சகாப்தத்துக்கு' முடிவு?

**அலசுவது இராஜதந்திரி**



*இலங்கையில் வரலாறு காணாத வகையில் ஆட்சியிலிருப் போர் மீது கடும் தாக்குதல் பொது மக்களால் நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்டதை நோக்கும் போது "பொறுத்தது போதும் பொங்கி எழுந்து விட்டோம்" என்ற செய்தியை ராஜபக்ஷ ஆட்சி யாளருக்கும் அவர்களைச் சார்ந் தோருக்கும் நாட்டு மக்கள் வழங்கி யுள்ளதையே அவதானிக்க முடிந்தது.*

*நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இருந்து ஆரம்பமான கலவரம் ஒரு பிரளயமா கவே மாறியிருந்தது. கீர்த்திமிக்க அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரஹாம் லிங்கன் கூறிய வாக்கியமே இவ்வேளையில் நினைவுக்கு வருவதாகவும் இருக்கின்றது. "சிலரை சில காலம் ஏமாற்றலாம் ஆனால், எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது" என்பதே அந்த வாக்கியமாகும். அந்த வாக்கியத்துக்கு அமைவாகவே நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்து நேற்று முன்தினம் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.*

*தலைநகரில் இடம்பெற்ற போராட்டத்தை நோக்கும்போது நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதியை நிலை நாட்ட வேண்டிய பிரதமரே கலவரத்தைத் தூண்டி விடும் வகையில் நடந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.*

*தமது உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் பெரியளவிலான சந்திப்புகளை நடத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ள மண்டபத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் மக்களை தூண்டி விடும் விதத்தில் அங்கே வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட பல நூற்றுக் கணக்கான நபர்கள் மத்தியில் உரையாற்றியிருந்தனர். அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களில் திறந்த வெளிச்சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்த மோசமான கைதிகள் சிலரும் அடங்கியிருந்தனர். அவர்களில் பெண்களும் அடங்குகின்றனர். அத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தாராளமாக மதுவும் விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டிருந்தது.*

*ஒரு மாதத்துக்கும் மேலாக காலிமுகத்திடலில் கூடியுள்ள ஆயிரக்கணக்கான அமைதி வழி ஆர்பபாட்டக்காரர்களை இலக்கு வைத்தே கலகக்காரர்கள் தூண்டிவிடப் பட்டிருந்தனர்.*

*நேற்று முன்தினம் அலரி மாளிகையிலிருந்து ஆரம்பமான கலகக்காரர்களின் அட்டகாசத்தை நோக்கும்போது பிரதமர் பதவியில் மட்டுமல்ல. ஒரு பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவத்தை கொண்டிருப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் அமைச்சர்களும் எவ்விதத்திலும் தகுதியோ அல்லது தராதரமோ அற்றவர்கள் என்பதே நிரூபணமாகியுள்ளது.*

*முற்றிலும் பொறுப்பற்ற விதத்தில் மஹிந்த ராஜபக்ஷ நடந்து கொண்டுள்ளமையையே அவதானிக்க முடிந்தது. ஏனெனில், அவரின் உரை அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நிறைவுற்றதும் அங்கிருந்த கலகக்காரர்கள் ஆவேசத்துடன் காலிமுகத்திடலிலுள்ள கற்பனைக்கிராமமான கோட்டா கோ கம நோக்கி நகர்ந்தனர். அச்சமயம் பொலிஸாரையும் ஆயுதப்படையினரையும் உடனடியாகவே செயலில் இறக்கி நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு எதனையும் செய்யாது அமைதியாக காலிமுகத்திடலில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இருந்து ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது தாக்குதல் நடத்த தூண்டிவிடப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமல்ல. சர்வ அதிகாரம் கொண்ட அவரின் சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷகூட காலிமுகத்திடல் கலகத்தைத் தடுக்க தமது அதிகாரத்தை பாவிக்க தவறியுள்ளமை மூலம் அராஜக நடவடிக்கைகளுக்கு அவரும் துணை போயுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*


*இதன்மூலம் இலங்கை 'குண்டர்' கும்பலால் ஆளப்படுகின்றது என்ற செய்தியையே தெளிவாகத் தந்துள்ளது.*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களில் பெரும்பாலானவர்களுக்கு பல குற்றவியல் வழக்குகளுடன் சம்பந்தமுள்ளதையே அறிய முடிகின்றது. இவர்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலகத்துக்கு மூலகாரணமாக இருந்தவர் என்று கூறப்படுகின்ற அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முக்கியமானவர். இவருக்கு எதிராக கொலைக்குற்ற வழக்கொன்று இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜோன்ஸ்டன் பெர்னாண்டேவின் அடியாட்களே நேற்று முன்தினம் கலகம் இடம்பெற்றபோது முன்னணியில் நின்றிருந்தனர்.*

*இருநூறுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ள நிலையில் அம்பாந்தோட்டையில் மெதமுலன என்ற இடத்தில் கால்ட்டன் என்ற பெயரில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் பூர்வீக இல்லமும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதை நோக்கும்போது இலங்கையில் ராஜபக்ஷ சகாப்தம் முடிவுக்கு வந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

*நேற்று முன்தினம் இடம்பெற்ற பெரும் போராட்டத்தையடுத்து இலங்கை அரசியலில் பல வியத்தகு மாற்றங்கள் இனிவரும் நாட்களில் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றே குறிப்பிட முடியும்.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நீங்கள் எதிர்பார்த்த செயல் ஒன்று இன்று வெற்றியாகும். நீண்ட இழுபறிக்குப்பின் உங்கள் முயற்சி தடையில்லாமல் நடைபெறும். இதுவரை தடையாக இருந்த செயல் இன்று நிறைவடையும்.

**இடபம்**
கல்வி சம்பந்தமான முயற்சி பயனளிக்கும். நட்பு வட்டம் விரியும். நேற்று வரவேண்டிய தொகை கைக்கு வந்து சேரும். மகிழ்ச்சியான நாள். அரசு வழி நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்**
உறவினர்கள் உதவியால் நேற்றைய பணிகளை செய்து முடிப்பீர்கள். தொழிலில் எதிர்பாராத லாபம் உண்டாகும். மகிழ்ச்சி ஏற்படும் நாள். நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.நிதி நிலை சீராகும்.

**கடகம்**
புதியவர்களை நம்பி எந்த பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். முயற்சியில் தடைகள் உண்டாகி பின்னர் சரியாகும். குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக சில நற்செயல்களில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்**
உங்கள் மனம் மகிழும்படியான சம்பவங்கள் இன்று நடைபெறும். நம்பிக்கையுடன் ஈடுபடும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நினைத்ததை அடைந்து உற்சாகம் காண்பீர்கள்.

**கன்னி**
உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். பிறரால் மதிக்கப்படுவீர்கள்.பெருமிதம் ஏற்படும் நாள். தொழிலில் கூடுதல் கவனம் தேவை.நிம்மதியான நாள்.

**துலாம்**
நேற்று தடைபட்டிருந்த வேலை இன்று நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் இன்று உண்டாகும். உங்களுக்கு சிலரால் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும்.

**விருட்சிகம்**
ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். கோவிலுக்கு செல்வீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சி இன்று கைகூடும்.

**தனுசு**
உங்கள் முயற்சி இழுபறியானாலும் இறுதியில் நிறைவடையும். திட்டமிட்ட செயல்களில் வெற்றியைக் காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகி நன்மைகளை அடைவீர்கள்.

**மகரம்**
இன்று உங்கள் செயல்களில் தடைகளும் இழுபறியும் இருக்கும். கடுமையான முயற்சிக்குப்பின் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி ஏற்பட பேச்சு வார்த்தை நடத்துவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்திற்குள் மகிழ்ச்சி உண்டாகும்.நிதி நிலை சீராகும். துணையின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உங்கள் செயல்களில் வெற்றிகளும் பாராட்டும்

**மீனம்**
உங்களின் விருப்பம் ஒன்று இன்று நிறைவேறும். எதிர்பார்த்த செயல் நடைபெறுவதால் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்யம் மேம்படும். மகிழ்ச்சியான நாள்.

# 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழரிடம் இரும்பின் பயன்பாடு!

## தமிழக ஆய்வில் தகவல் என்கிறார் முதல்வர்!



சென்னை, மே 11

கிருஷ்ணகிரி - மயிலாடும்பாறையில் நடந்த அகழாய்வில், சுமார் 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் இரும்பை பயன்படுத்தியது தெரிய வந்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டபேரவையில் நேற்றுமுன்தினம் பேசிய அவர்,

தமிழ் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதிசெய்து, உலகுக்கு அறிவிக்க தமிழ்நாடு தொல்லியல் துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது. பூம்புகார், கொற்கை, அழகன்குளம் உள்ளிட்ட சங்ககால துறைமுக நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த ரோமானிய நாணயங்கள், மெருகூட்டப்பட்ட மண்பாண்டங்கள், அரேபிய தீபகற்பத்தைச் சார்ந்த அயலகப் பொருட்கள் மூலம், சங்ககாலத் தமிழர்கள் கடல்வழி வணிகத்தில் சிறந்து விளங்கினர் என்பதை நிறுவ முடிந்தது.

இதேபோல, அங்கே கிடைத்த அரியவகை சூதுபவள மணிகள், ஒளிர்மிகு நீலமணிகளைக் கொண்டு, கங்கைச் சமவெளி மற்றும் வடமேற்கு இந்தியப் பகுதிகளுடன் தமிழர்கள் உள்நாட்டு வணிகம் மேற்கொண்டிருந்ததும் உறுதி செய்யப்பட்டது.

கீழடி அகழாய்வில் வெளிப்பட்ட கட்டுமானங்கள், தொல்பொருட்களின் செய்நேர்த்தி, தொழில்நுட்பத் திறன், பொறியியல் நுணுக்கம் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்ததில், சங்ககாலத் தமிழகத்தில் நன்கு முதிர்ச்சியடைந்த நகரப் பண்பாடு செழித்து வளர்ந்திருந்ததை உலகுக்கு அறிவிக்க முடிந்தது.

அதுமட்டுமின்றி கீழடி, கொடுமணல், பொருந்தல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம், தமிழ் எழுத்துகளின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு என்று அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு சிவகளை அகழாய்வின் போது கிடைத்த நெல்மணிகளை பகுப்பாய்வு செய்து, பொருநை ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு தொல்லியல் துறை, அகழாய்வுகளை மேற்கொள்வதிலும், தொல்பொருட்களை ஆய்வு செய்வதிலும் காந்த அளவியல் பகுப்பாய்வு, ஆளில்லா வான்வழி ஊர்தி ஆய்வு, தரை ஊடுருவல் தொலையுணர்வு மதிப்பாய்வு போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.

இதேபோல, அகழாய்வுகளில் கிடைக்கும் தொல்பொருட்களை ஆய்வுசெய்ய, தொல் தாவரவியல், தொல் விலங்கியல், தொல் மரபணு ஆய்வு, சுற்றுச்சூழல் தொல்லியல், மண் பகுப்பாய்வு, உலோகவியல், கடல்சார் ஆய்வு போன்ற பல் துறை வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்ற, புகழ்பெற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு அறிவியல் வழி ஆய்வுகள் செய்யப்பட்டதில் கிடைத்த முடிவுகள்:

கீழடி அகரத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை மகரந்தம் மற்றும் பைட்டோலித் முறையில் பகுப்பாய்வு செய்ததில், அங்கு நெல் பயிர்கள் பயிரிடப்பட்டிருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, கடந்த ஆண்டு தொல்லியல் துறையால், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் ஈமச்சின்னங்கள் மற்றும் வாழ்விடப் பகுதியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாறை ஓவியங்கள், புதிய கற்காலக் கருவிகள் என அரியவகை தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட மயிலாடும்பாறையின் வாழ்விடப் பகுதியில், 104 செ.மீ. மற்றும் 130 செ.மீ. ஆழத்தில் சேகரிக்கப் பட்ட 2 கரிம மாதிரிகள், அமெரிக்காவின் ப்ளோரிடா மாநிலத்தில் உள்ள பீட்டா பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்தப் பகுப்பாய்வின் காலக் கணக்கீடு முடிவுகள்படி, அவற்றின் சராசரி மைய அளவீட்டுக் காலம் முறையே கி.மு. 1615 மற்றும் கி.மு. 2172 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மனித இனம் இரும்பின் பயனை உணரத் தொடங்கிய பின்புதான், அடர்ந்த வனங்களை அழித்து, வேளாண்மை செய்யும் போக்கு உருவாகியுள்ளது.

அந்தவகையில், தமிழகத்தில் வேளாண்மைச் சமூகம் தொடங்கிய காலம் குறித்த கேள்விகளுக்கு தெளிவான விடை கிடைத்துள்ளது.

இந்தியாவில், இரும்புகாலப் பண்பாடு நிலவிய கங்கைச் சமவெளி, கர்நாடகா உள்ளிட்ட 28 இடங்களில் இதுவரை காலக் கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது மயிலாடும்பாறையில் கிடைத்துள்ள முடிவுகளான, 4200 ஆண்டுகளுக்கு முற்பட்டதே, காலத்தால் முந்தியது என்பது நமக்குப் பெருமை அளிப்பதாகும் - என்றார். (ஐ)

# இலங்கைக்கு நிவாரண திட்டம் தமிழக பா.ஜ.க. உதவி செய்யும்!

## மாநில தலைவர் அண்ணாமலை



கோவை, மே 11

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இலங்கைக்கு உதவி செய்யும் முயற்சிக்கு தமிழக பா. ஜ. க. உதவி செய்யும். நாங்களும் உறுதியாக இருக்கின்றோம். இதில் அரசியல் செய்ய நான் விரும்பவில்லை. நாங்களும் உதவி செய்ய முன்வந்துள்ளோம் என்று கூறியுள்ளார் அந்தக் கட்சியின் மாநில தலைவரான கு. அண்ணாமலை.

அத்துடன், பத்து ஆண்டுகள் கழித்து தமிழக அரசியலில் தி. மு. க. என்ற கட்சி இருக்காது என்றும் அவர் கூறினார். கோவையில் அவர் செய்தியாளர்களை சந்தித்த போது,

தமிழகத்தில் கட்டாய ஹிந்தி திணிப்பை பா.ஜ.க. அனுமதிக்காது. அதுதான் எங்கள் நிலைப்பாடு. இதில் எங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை. 10 ஆண்டுகள் கழித்து கேட்டாலும் இதுதான் எங்கள் கருத்து. இது என் கருத்து அல்ல. கட்சியின் கருத்து.

ஒரு குடும்பம் கட்சியை நடத்த வேண்டும் என்று நினைக்கிறது. அந்த குடும்பத்தை சார்ந்தவர்கள் அந்த கட்சி இருக்க வேண்டும் என நினைக்கின்றனர். வேறு யாருமே வளரக்கூடாது என்று நினைக்கின்றனர். இதையே காங்கிரஸ் கட்சியினர் 10 ஆண்டுகளுக்கு முன்பு நினைத்தனர்.

இப்போது காங்கிரஸ் எந்தநிலையில் உள்ளது என்பது அனை வருக்கும் தெரியும். தி. மு.கவுக்கும், காங்கிரஸூக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

10 ஆண்டுகள் கழித்து தமிழக அரசியலில் தி. மு. க. என்ற கட்சி இருக்கிறதா என்று பாருங்கள் - என்றார். (ஐ)



# வவுனியா ஸ்தம்பிதம்!

வவுனியா, மே 11
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவுக்கு அமைவாக நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்டத்தின் இயல்பு நிலை முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்தது.
வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை. பாடசாலைகளும் இடம்பெறவில்லை.
இதனால் வவுனியா மாவட்டத்தின் இயல்பு நிலை முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் பொறுப்புடன் நடக்கவேண்டும்

## மாவட்ட செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 11

**"தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக அத்தியாவசிய பொருள்களை எடுத்து வருவதில் தாமதங்கள் ஏற்படலாம் என்பதால் யாழ்ப்பாண வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்புடன் செயற்பட்டு பொதுமக்கள் பொருள்களை வழங்கவேண்டும்."**

-இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் வலியுறுத்தியுள்ளார்.
தற்போதைய நிலையில் பொருள்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதனை வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்க்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-
சில இடங்களில் வர்த்தகர்கள் பொருள்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவை தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கண்காணிப்புகளை மேற்கொள்ளும்.



தென்னிலங்கையிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவது ஒரு வாரம் தாமதமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
எனவே பொதுமக்கள் அத்தியாவசிய பொருள்களை பகிர்ந்து விற்பனை செய்வது தொடர்பிலும் தற்போதைய நிலையை எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பிலும் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக சங்கங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது-என்றார். (அ-03)

# ராஜபக்ஷ குடும்பத்தினர் தப்பிச் செல்ல முயற்சியா?

## இரத்மலானை விமான நிலையம் அருகே இளைஞர்கள் சோதனை

கொழும்பு, மே 11
இரத்மலானை விமான நிலையத்திற்கு அருகில் நேற்று அதிகாலை வரை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடி, அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக விமான நிலையத்துக்கு வருகிறார்களா என்பதை கண்டறிய காலி வீதியில் பயணிக்கும் அனைத்து வாகனங்களையும் சோதனை செய்தனர்.
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ தம்பதி நேற்று முன்தினம் காலை நாட்டிலிருந்து வெளியேறிச் சென்றிருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இனி அரசியலுக்கே வரமாட்டேன் கதறியழும் பெரமுனவின் எம்.பி.

கொழும்பு, மே 11
பொதுமக்களால் தனது வீடு தீ வைத்ததை பார்த்து பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கதறி அழுதுள்ளார்.
பொதுஜன பெரமுனவினரால் நேற்றுமுன்தினம் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதை தொடர்ந்து, நாடு முழுவதும் பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்களின் வீடுகளும் தீ வைக்கப்பட்டன.
பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர் குணபால ரத்னசேகரவின் வீடும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.
தனது வீடு தீக்கிரையானதால் அவர் கண்ணீர்விட்டு அழுதுள்ளார். பின்னர் அது குறித்து பேஸ்புக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.
"நான் அரசியலில் இருந்து ஒரு ரூபாய் கூட சம்பாதிக்கவில்லை. இரவும் பகலும் உறங்காமல் கற்பித்து சம்பாதித்த பணத்தில் கட்டிய வீடு இப்போது தீயாக எரிகிறது. வாழ்நாள் முழுவதும் அரசியலுக்கு வரமாட்டேன்' என தெரிவித்துள்ளார்.
இவர் ஆசிரியராக இருந்து பொதுஜன பெரமுனவின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதிகள் பயணித்த பஸ் மீது தாக்குதல்!

கொழும்பு, மே 11
சிறைச்சாலை புனர்வாழ்வு முகாமிற்கு நிர்மாணப் பணிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகளுக்காக சிறைக் கைதிகளை ஏற்றிச் சென்ற பஸ் மீது நேற்று முன்தினம் இரவு வன்முறைக் கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த சம்பவத்தில் 3 சிறை அதிகாரிகள் மற்றும் 10 கைதிகள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார். (அ)

# மக்கள் அமைதி காக்கவேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே 11
தீர்மானமிக்க தருணங்களில் வன்முறையில் ஈடுபடாமல் அமைதியாக இருக்குமாறு பொதுமக்களை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுள்ளது.
வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.
கொழும்பில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து பல்வேறு இடங்களில் அரச தரப்பினரது வீடுகள் மற்றும் சொத்துகள் தாக்கிய சேதமாக்கப்பட்டும் தீக்கிரையாக்கப்படும் சம்பவங்களும் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறைக்கைதிகளையும் கலவரத்துக்காக அழைத்து வந்தனரா மஹிந்த தரப்பினர்?

கொழும்பு, மே 11
மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரால் நேற்று முன்தினம் கொழும்பில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை தொடர்பான பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
இந்த கலவரத்துக்காக அழைத்து வரப்பட்டவர்களுக்கு தாராளமாக மது பானம் விநியோ கிக்கப் பட்டமைக்கான ஆதா ரங்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தன.
பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டபலர், சமுர்த்தி உதவி உள்ளிட்ட உதவிகளை நிறுத்தப்போவதாக மிரட்டி கலவரத்துக்கு அழைத்து வரப்பட்டதாக தெரிவித்திருந்தனர்.



அரசுக்கு எதிராக அமைதி யாகப் போராட்டம் நடந்து வரும் மைனா கோ கம, கோட்டா கோ கம பகுதிகளுக்குள் நேற்று முன்தினம் நுழைந்த கலவரக்காரர்கள் கொடூர தாக்குதலை நடத்தினர். எனினும், பின்னர் பொதுமக்கள் திரண்டு கலவரக்காரர்களை விரட்டி விரட்டி அடித்தனர். பல இடங்களில் கலவரக்காரர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.
இவ்வாறு பிடிக்கப்பட்ட ஒரு குழுவினர், வட்டரக்க திறந்தவெளி சிறைச்சாலையிலிருந்து தாம் அழைத்து வரப்பட்டதாக தெரிவித்தனர்.
சிறைச்சாலை உத்தியோகத்தர் ரத்நாயக்க என்பவரால் தாம் அழைத்து வரப்பட்டதாக அவர்கள் கூறினர். (அ)

# வீரகெட்டியவில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி! ஒன்பது பேர் காயம்!!

கொழும்பு, மே 11
அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பிரதேச சபைத் தவிசாளரின் இல்லத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன், மேலும் 9 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மக்களுக்காக வீதியில் இறங்க ஒருபோதுமே அஞ்சமாட்டேன்

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, மே. 11

**அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கண்டனம் தெரிவித்துள்ளார்.**



காலி முகத்திடலில் தாம் தாக்கப்பட்டமை தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள அவர் தான் கஷ்டப்பட்டு தப்பியதாகவும் மக்களுக்காக வீதியில் இறங்க பின்வாங்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியதாவது:

நானும் அங்கு சென்றேன். அந்த நேரத்தில் நான் குண்டர்களால் தாக்கப்பட்டேன். குண்டர்கள், அரச பயங்கரவாதிகள், அரச காட்டுமிராண்டிகள் போன்றோருக்கு பிரேமதாஸாக்கள் ஒருபோதும் பயப்படுவதில்லை .

எனது உத்தியோகபூர்வ வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. கஷ்டப்பட்டு தப்பி வந்தேன்.

கண்ணாடித் துண்டுகள் என் மீது பாய்ந்தன. மக்களுக்காகவே வீதிக்கு வந்தேன். மக்களுக்காக வீதிக்கு வர அஞ்சமாட்டேன் - என்றார். (அ)

# மஹிந்த, ஜோன்ஸ்டனை கைது செய்யவேண்டும்!

## வலியுறுத்துகிறார் மைத்திரிபால

கொழும்பு, மே. 11



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை அழைத்து, போராட்டக்காரர்களை தாக்குதவதற்கு தூண்டிய மஹிந்த ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ உள்ளிட்டவர்கள் உடன் கைது செய்யப்படவேண்டும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ கைது செய்யப்படவேண்டும் என சுமந்திரன் எம்.பியும் வலியுறுத்தியுள்ளார்.

தாக்குதலுக்கு மஹிந்த ராஜபக்ஷ பொறுப்புக்கூறவேண்டும் என ஓமல்பே சோபித தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



# திருமலை எம்.பியின் வீடும் அடித்துடைப்பு

கொழும்பு, மே. 11

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துக்கோரளவின் கந்தளாயில் உள்ள வீடு தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

மேலும் சில பிரதேச சபை உறுப்பினர்களது வீடுகளும் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து மொட்டு தரப்பினரின் வீடுகள், அலுவலகங்கள் என்பன தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றை உடனடியாகக் கூட்டுமாறு ஜனாதிபதியிடம் சபாநாயகர் கோரிக்கை!

கொழும்பு, மே. 11

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் குறித்து கலந்துரையாடுவதே இதன் நோக்கமாகும் என சபாநாயகர் மேலும் கூறினார்.

கடந்த 6 ஆம் திகதி சபாநாயகரினால் பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல் காரணமாக புதிய பிரதமரை தெரிவு செய்யும் பொறுப்பு பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமொன்று இன்று கூட்டப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் நாட்டில் நிலவும் முரண்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

# யாழ். மாவட்டத்தில் வன்முறை இல்லை!

யாழ்ப்பாணம், மே.11

யாழ்ப்பாணத்தில் தற்போது வரை எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை என வடக்கு பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

நாடு பூராகவும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் மற்றும் அரச தரப்பு ஆதரவாளர்களின் வீடுகள் வாகனங்கள் எரியூட்டப்பட்டதோடு தாக்கப்பட்ட நிலையில் நாடு முழுவதும் அரசு ஆதரவாளர்களின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படு கின்றபோதிலும் யாழ். மாவட்டத்தில் தற்போது வரை எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை. (அ)

# நாடு தழுவிய ஊரடங்குச் சட்டத்தால் மன்னாரில் இயல்புநிலை ஸ்தம்பிதம்

மன்னார், மே. 11



நாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை தொடர்ந்து நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவுக்கு அமைவாக நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

கொழும்பில் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொண்டவர்கள் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரச தரப்பு ஆதரவாளர்கள் மேற்கொண்ட கடுமையான தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 7 மணி முதல் இன்று புதன் கிழமை காலை 7 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்திலும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. அரச ,தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறவில்லை. பாடசாலைகளும் இடம் பெறவில்லை.

இதனால் மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எம்.பிக்கள் தப்பிச்செல்வதை தடுக்க இளைஞர்கள் முயற்சி!

கொழும்பு, மே. 11

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் இளைஞர்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நுழைவாயிலை மறித்துப் போராட்டம் நடத்தினர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதை நோக்காகக் கொண்டே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

விமான நிலைய நுழைவாயிலை இளைஞர்கள் வாகனங்களுடன் சென்று முற்றுகையிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நேற்று அதிகாலை அலரிமாளிகையில் இருந்து வெளியேறிய மஹிந்த ராஜபக்ஷ உட்பட்டவர்கள், வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்லக் கூடும் என்று தகவல்களின் அடிப்படையிலேயே இந்த போராட்டம் நடத்தப்பட்டது. (அ)

# நிட்டம்புவ துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தோர் 3 ஆக உயர்வு!

கொழும்பு, மே. 11

நிட்டம்புவ பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட அமைதியின்மையில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள, அவரது பாதுகாவலர் மற்றும் வத்துபிட்டிவல வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த 27 வயதான நபருமாக மூவர் இவ்வாறு உயிரிழந்தனர்.

அத்துடன் சம்பவத்தில் காயமடைந்த மேலும் 5 பேர் வத்துபிட்டிவல வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# பாரிய விளைவுகளை நாடு சந்திக்க நேரிடும்

## இலங்கை வர்த்தக சம்மேளனம் எச்சரிக்கை

கொழும்பு, மே 11

**மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாடு பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் எச்சரித்துள்ளது.**

அலரி மாளிகைக்கு வெளியேயும் காலி முகத்திடலிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களால் பீதியடைந்துள்ளதாக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அரசாங்க எதிர்ப்பு ஆதரவாளர்கள், கடந்த ஒரு மாத காலமாக அமைதியான போராட்டத்தை முன்னெடுத்த நிலையில், அரசாங்க ஆதரவாளர்களால் வன்முறைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் வன்முறைகளுக்கு பொறுப்பானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் பொறுப்புக்கூறும் வகையில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்று சம்மேளனம் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

ஹகுடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறினால்,அது, நாடு எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான தற்போதைய முயற்சிகளை சீர்குலைக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# ஞானக்காவின் வீடும் தீக்கிரை

கொழும்பு, மே 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடரான ஞானக்கா எனப்படும் பெண்ணின் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் அமைந்துள்ள ஞானக்காவின் வீடு மற்றும் ஹோட்டல் ஆர்ப்பாட்டக்காரர்களால் நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அங்கிருந்த பொருட்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ள நிலையில் முழுமையாக தீ வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது அங்கு ஒருவரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பொலிஸ் அதிபர், இராணுவ தளபதியிடம் மனித உரிமை ஆணைக்குழு விசாரணை!

கொழும்பு, மே 11

இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக இராணுவத்தளபதியும், பொலிஸ்மா அதிபரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை ஆணைக்குழுவில் பிரசன்னமாகுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளின்போது அவற்றை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த தவறியமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு கோரியே பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரட்னவும், இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலை தொடர்பில் பொலிஸ் அதிபர், ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்ட பின்னரே அது தொடர்பிலான உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்

இந்த நிலையில் நேற்று முன்தினம் சம்பவத்தை பொறுத்தவரை அது அலரி மாளிகையில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான கூட்டத்தின் பின்னரே கட்டவிழ்த்துவிடப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மஹிந்தவின் ஆதரவாளர்கள் காலி முகத்திடலின் பண்டாரநாயக்க சிலை பிரதேசத்துக்கு செல்லும் வரை பொலிஸ் அல்லது இராணுவத்தின் தலையீடு இருக்கவில்லை என்பதை காணொளிக் காட்சிகள் சாட்சியப்படுத்தியுள்ளன. (அ)

# காலிமுகத்திடல் சம்பவம்: விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 11

காலிமுகத்திடலில் உள்ள "கோட்டா கோ கம" போராட்டத்தளத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் தலைமையகம் இதனைத் தெரிவித்துள்ளது. (அ)



# சமல் ராஜபக்ஷ எம்.பியின் அலுவலகம் மீது தாக்குதல்!

கொழும்பு, மே 11

பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷவின் திஸ்ஸ மஹாராம அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் கோட்டா கோ கம மீது நேற்று முன் தினம் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களது வீடுகள் மற்றும் காரியாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று காலை பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷவின் திஸ்ஸமஹாராம அலுவலகம் மீது சரமாரியான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (அ)

# வன்முறையை தூண்டுவதற்காக நாம் கூட்டத்தை நடத்தவில்லை!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே 11

அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டம் அரசாங்கத்துக்கான ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட கூட்டம் எனவும் வன்முறையை தூண்டும் நோக்கில் அந்த கூட்டம் நடத்தப்படவில்லை எனவும் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை வன்முறை பலமிக்கவர்கள் பயன்படுத் திக்கொண்டுள்ளனர். எனினும் வன்முறையானது சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை நோக்கித் திருப்பப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ தனது ஊடகப் பிரிவின் ருவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் இதனை கூறியுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச சபைகளின் தலைவர்கள்,



உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர்கள் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த போன்றவர்கள் ஆதரவாளர்களை தூண்டிவிடும் வகையில் பேசியதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், கூட்டம் முடிந்து வெளியில் வந்த பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிச் சபைகளின் அரசியல்வாதிகள் மற்றும் ஆதரவாளர்கள், அலரி மாளிகைக்கு எதிரில் அமைதியாக போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அத்துடன் அங்கிருந்த கூடாரங்களை அடித்து உடைத்து, எரித்தனர்.

இதன் பின்னர் காலிமுகத்திடல் நோக்கிச் சென்று கோட்டா கோ கமவில் உள்ள ஆதரவாளர்களை தாக்கியதுடன் கூடாரங்களையும் சேதப்படுத்தி தீயிட்டு எரித்தனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்தும் மக்கள் ஆத்திரமடைந்து, நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதுடன் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பூர்வீக இல்லம் உட்பட முக்கிய அரசியல்வாதிகள் பலரது வீடுகளை தீயிட்டு கொளுத்தினர்.

அத்துடன் போராட்டகாரர்கள் தம் மீது தாக்குதல் நடத்த வந்திருந்த ஆளும் கட்சியின் ஆதரவாளர்களை தாக்கிச் சிறைப்பிடித்தனர். அவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருந்த பஸ்கள் மற்றும் வாகனங்களை தாக்கியழித்தனர்.

போராட்டக்காரர்கள் மீதான ஆளும் கட்சியினரின் இந்த தாக்குதல் சம்பவம் நாட்டில் பெரும் பதற்றத்தையும் வன்முறையையும் ஏற்படுத்தியதுடன் நாட்டை கலவரபூமியாக மாற்றி இருந்தது. (அ)

# தப்புக் கணக்கு!

## உலக சுகாதார அமைப்பின் கொரோனா பலி எண்ணிக்கை

**இந்தியாவின் அதிகாரபூர்வ கோவிட் 19 உயிரிழப்பு எண்ணிக்கை 4.81 லட்சம் என்றால், அதுவே உலக சுகாதார அமைப்பின் கணிப்பின்படி 47.11 லட்சம்!**

உலக சுகாதார அமைப்பு வெளியிட்டிருக்கும் கோவிட் 19 கொள்ளை நோய்த்தொற்று மரணங்கள் தொடர்பான புள்ளிவிவர அறிக்கை இப்போது உலக அளவில் விவாதப் பொருளாகி இருக்கிறது.

2020, 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளில் உலக அளவில் 1.5 கோடி பேர் கொள்ளை நோய்த்தொற்றுக்கு பலியானதாகத் தெரிவிக்கிறது அந்த அறிக்கை. பல்வேறு நாடுகளின் அதிகாரபூர்வ எண்ணிக்கையான 54 லட்சத்துடன் ஒப்பிடும்போது, உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரம் ஏறத்தாழ மூன்று மடங்கிலும் அதிகம்.

அந்த அறிக்கையின்படி, பெரும்பாலான கோவிட் 19 உயிரிழப்புகள் தென்கிழக்கு ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பியாவில் நிகழ்ந்திருக்கின்றன. மொத்த உயிரிழப்புகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மரணங்கள் இந்தியாவில் நிகழ்ந்ததாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவின் அதிகாரபூர்வ கோவிட் 19 உயிரிழப்பு எண்ணிக்கை 4.81 லட்சம் என்றால், அதுவே உலக சுகாதார அமைப்பின் கணிப்பின்படி 47.11 லட்சம்!



இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், நிதி ஆயோக், எய்ம்ஸ் உள்ளிட்ட அமைப்புகளின் வல்லுநர்கள், உலக சுகாதார அமைப்பு கையாண்டிருக்கும் கணக்கீட்டு முறையையும், எண்ணிக்கையையும் விமர்சித்திருக்கிறார்கள். மார்ச் மாதம் 'லான்செட்' மருத்துவ இதழ் வெளியிட்ட புள்ளிவிவரங்களுடன் உலக சுகாதாரஅமைப்பின் அறிக்கை தரும் எண்ணிக்கை ஒத்துப் போகிறது என்றாலும், இப்போது வெளியிட்டிருக்கும் பத்து மடங்கு அதிகமான உயிரிழப்பு எண்ணிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

உலக சுகாதார அமைப்பு வெளியிட்டிருக்கும் 'அதிகரித்த உயிரிழப்பு எண்ணிக்கை' என்பது, வழக்கமான உயிரிழப்புகளிலிருந்து கொள்ளை நோய்த்தொற்று காரணமாக அதிகரித்த எண்ணிக்கை என்று கொள்ளலாம். 2023-இல் கூடுதல் தகவல்களைத் திரட்டி, மறுமதிப்பீட்டு அறிக்கை வெளிவரும் என்று அந்த அமைப்பு அறிவித்திருக்கிறது. பல வளர்ச்சி அடைந்த நாடுகள் அந்த அமைப்பின் புள்ளிவிவரம் குறித்து சந்தேகம் எழுப்பி இருப்பதுதான் அதற்குக் காரணம்.

கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொண்டதில், உலக சுகாதார அமைப்பு பல சறுக்கல்களையும், தவறுகளையும் எதிர்கொண்டது என்பது அனைவருக்கும் தெரியும். நோய்த்தொற்று பரவத் தொடங்கிப் பல வாரங்கள் கடந்தும்கூட சர்வதேச அவசரநிலையை உலக சுகாதார அமைப்பு அறிவிக்கவில்லை. வூஹான் நகருக்கு சர்வதேச விஞ்ஞானிகள் சென்று ஆய்வு நடத்த சீனாவை சம்மதிக்க வைப்பதற்கே பல வாரங்கள் எடுத்தன. அதற்குள் உலக அளவில் நோய்த்தொற்று பரவிப் பல உயிர்கள் பலியாகி விட்டன.

பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் உள்பட பல மாநிலங்கள் உலக சுகாதார அமைப்பின் எண்ணிக்கை முறையைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன. தேசம் தழுவிய அளவிலான நோய்த்தொற்று பாதிப்பு விகிதத்தின் (டெஸ்ட் பாசிடிவிட்டி ரேட்) அடிப்படையில் அமைந்திருக்கும் உலக சுகாதார அமைப்பின் எண்ணிக்கைக் கணக்கெடுப்பு, இந்தியாவுக்குப் பொருந்தாது என்கிற அவர்களின் வாதத்தில் சில நியாயங்கள் இருக்கத்தான் செய்கிறது.

3.46 கோடி மக்கள்தொகையுள்ள கேரளத்தில் 10 பேர் உயிரிழந்தால், 140 கோடி மக்கள்தொகையுள்ள இந்தியாவில் 406 பேர் உயிரிழந்திருக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பின் கணக்கெடுப்பு அனுமானிக்கிறது. 2020இல் மகாராஷ்டிரத்தில் இந்தியாவின் மொத்த பாதிப்பில் 15 வீதம் இருந்தது என்றால், 2021-இலும் அதே அளவு பாதிப்பு இருந்ததாகக் கருதுகிறது. பல மாநிலங்களின் உயிரிழப்புக் கணக்குகளை, இணையதளத்திலிருந்தும், ஊடகச் செய்திகளின் அடிப்படையிலும் சேகரித்ததாகக் கூறுவதால் அந்தக் கணக்கெடுப்பை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.



பெரும்பாலான நாடுகளின் உயிரிழப்பு புள்ளிவிவரங்களை அப்படியே ஏற்றுக்கொண்ட உலக சுகாதார அமைப்பு, இந்தியாவின் புள்ளிவிவரங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு, இந்திய ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்களைச் சுட்டிகாட்டுகிறது.

கடந்த 20 ஆண்டுகளாகக் குழப்பத்தின் பிடியில் சிக்கி, எந்தவித கட்டமைப்பும் இல்லாத ஈராக்கின் புள்ளிவிவரம் எந்தவிதக் கேள்விக்கும் உள்ளாகாமல் ஏற்றுக்கொள்ளப்படுவதும், இந்தியாவின் புள்ளிவிவரத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும் உலக சுகாதார அமைப்பின் உள்நோக்கத்தை சந்தேகிக்கத் தோன்றுகிறது.

கொள்ளை நோய்த்தொற்றின்போது, இந்திய உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகள் பலவும் கோவிட் 19 மரணங்களைக் கணக்கில் காட்டவில்லை என்கிற குற்றச்சாட்டு எழுந்தது என்னவோ உண்மை. மக்கள் மத்தியில் பீதி ஏற்படாமல் இருக்க சரியான புள்ளிவிவரம் வெளியிடப்படாமல் இருந்திருக்கக் கூடும். ஆனால், பிறப்பு - இறப்புப் பதிவேடு சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்திய பிறப்பு - இறப்பு பதிவு முறையில் சில குறைபாடுகள் இருந்தாலும், பெரும்பாலும் தவறு நடக்க வழியில்லை. ஏனென்றால், இறப்புச் சான்றிதழ் இல்லாமல் சொத்துப் பெயர் மாற்றம் செய்ய முடியாது என்பதால் உயிரிழப்புகள் முனைப்புடன் பதிவு செய்யப்படுகின்றன. கோவிட் 19 உயிரிழப்புகள் பெரும்பாலும் அடித்தட்டு மக்களை பாதிக்கவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

உலக சுகாதார அமைப்பு அறிக்கையும், கணக்கும் ஒருபுறம் இருக்கட்டும். அதை விமர்சிப்பதில் நேரத்தை வீணாக்காமல், இந்திய பிறப்பு - இறப்பு பதிவு முறையை அப்பழுக்கற்றவிதத்தில் கட்டமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சரியான புள்ளிவிவரங்களின் அடிப்படையில்தான் முறையான திட்டமிடல் சாத்தியம் என்று இந்திய பத்திரிகைகள் அரசுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றன.



# பிரதமர் மஹிந்த ராஜினாமா: இனி என்ன நடக்கும்?



இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகிவிட்டாார்.

இலங்கையில் நீடித்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளும் ஆரசாங்கம் நிரந்தரத் தீர்வை வழங்கத் தவறியதாகவும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகித்து வரும் ராஜபக்ஷ குடும்பத்தினர் அமைச்சரவையில் இருந்து விலக வேண்டும் என்றும் கோரி கடந்த ஏப்ரல் 9ஆம் தேதி பொதுமக்கள் வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கினார்கள்.

ஆனால், தமது பதவியில் இருந்து விலக முடியாது என்று கோட்டாபய ராஜபக்ஷவும் மஹிந்த ராஜபக்ஷ வும் ஆரம்பத்தில் கூறி வந்தனர். பிரதமர் பதவி விலகுவார் என்று சில முறை ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தபோதும், அதை வெளிப்படையாகவே கோட்டாபயவும், மஹிந்தவும் மறுத்தனர்.

இந்த நிலையில், ராஜபக்ஷ நேற்று முன்தினம் (மே 9) தமது பதவியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார்.

அந்த கடிதத்தில், மே 6ஆம் தேதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் நடந்த இணக்கப்பாடுக்கு அமைய இடைக்கால அரசை அமைக்கவும் அரசியலமைப்பு விதிகளின்படி மேற்கொள்ளப்படும் ஏற்பாட்டுக்கு தமது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் மஹிந்த கூறியிருந்தார்.

### போராட்டத் திடலில் நடந்த தாக்குதல்

முன்னதாக, நேற்றுமுன்தினம் நண்பகலில் கொழும்பு காலி முகத்திடலில் ஆளும் அரசுக்கு எதிரான போராட்டக்குழுவினருக்கு போட்டியாக மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டனர்.

அவர்கள் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களால் அமைக்கப்பட்ட கூடாரங்கள் மற்றும் பிற அமைப்புகளை சேதப்படுத்தினர். எதிரெதிர் குழுவினர் ஒரே போராட்டக்களத்தில் திரண்டதால் அங்கு பெருமளவில் பொலிசார் குவிக்கப்பட்டனர். இரு தரப்பினரையும் தடுக்கும் கையில் தடுப்புகளை போட்டு பொலிசார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இருப்பினும், அதையும் மீறி மஹிந்த ஆதரவுக்குழுவினர் அரசு எதிர்ப்பாளர்கள் இருந்த பகுதிக்குச் சென்று அங்கிருந்தவர்களை கட்டைகளைக் கொண்டும் கைகளாலும் கடுமையாகத் தாக்கினர். இது தொடர்பாக களத்தில் இருந்து வெளி வந்த காணொளியில் போராட்டப் பகுதியில் இருந்த பெண்களை அவர்களின் தலை முடியைப் பிடித்து இழுத்தும் தள்ளியும் தாக்கும் காட்சிகள் இருந்தன.

இதுவரை நடந்த மோதலில் சுமார் 78 பேர் காயமடைந்துள்ளதாக ஏஎப்பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து இதுவரை 16 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது. மற்றவர்கள் வேறு சில மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாடு எதிர்நோக்கும் மோசமான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இடைக்கால நிர்வாகத்தை அமைக்குமாறு மஹிந்தவின் தம்பியும் ஜனாதிபதியுமான கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்தின் மீது அழுத்தம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ராஜிநாமா செய்ய முன்வரலாம் என திங்கள்கிழமை காலையில் இருந்தே செய்திகள் வெளிவந்தன.

இதற்கிடையே வன்முறை தீவிரமானதால், மஹிந்த ராஜபக்ஷ தமது ட்விட்டர் பக்கத்தில், "வன்முறை செயல்பாடுகள் அந்த வன்முறையை மேலும் தூண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தேவை ஒரு பொருளாதார தீர்வு மட்டுமே. அதற்கு இந்த நிர்வாகம் உறுதிபூண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது ட்விட்டர் பக்கத்தில், "வன்முறைச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். வன்முறை தற்போதைய பிரச்னைகளைத் தீர்க்காது. அனைத்து குடிமக்களும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நெருக்கடியை தீர்க்க



அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்," என்று கூறியுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் மீது தாக்குதல்

முன்னதாக, நேற்று முன்தினம் காலையில், அரசு எதிர்ப்பாளர்கள் மீது மஹிந்த ஆதரவாளர்கள் என்று கூறிக் கொண்ட சிலர் கடுமையாக தாக்குதல் நடத்தியதால் போராட்டக்களத்தின் பிரதான இடமான காலி முகத்திடலில் பதற்றம் நிலவியது.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச போராட்ட பகுதிக்கு வந்தார். அவரை ராணுவ அதிரடிப்படை வீரர்களும் உள்ளூார் பொலிஸாரும் பாதுகாப்புடன் அழைத்து வந்தனர்.

அவர்கள் காலி முகத்திடல் பகுதிக்குள் நுழைந்த வேளையில், அவரை நோக்கி போராட்க்காரர்கள் கட்டைகளையும் தண்ணீர் பாட்டில்களையும் வீசினார்கள். சஜித் இருந்த இடத்தில் சில கட்டைகள் விழுந்தன. இதையடுத்து அவரை சூழ்ந்து கொண்டு பொலிசார் வாகனத்தில் ஏற்றினர். அந்த வாகனத்தை நோக்கியும் கட்டைகள் வீசப்பட்டன.

வன்முறை சம்பவங்கள் தீவிரமானதால் கொழும்பில் ஊரடங்கு சட்டம் உடனடியாக அமலுக்கு கொண்டு வரப்பட்டது.

### ஜனாதிபதி என்ன செய்வார்?

காலி முகத்திடல் பகுதிக்கு நேற்று மன்தினம் காலையில் நூற்றுக்கணக்கான பிரதமரின் ஆதரவாளர்கள் பேருந்துக் மூலம் அழைத்து வரப்பட்டதாக களத்தில் உள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர். அதில் சிலர் அலரி மாளிகைக்கு பேரணியாக சென்று பிரதமருக்கு ஆதரவளித்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதைத்தொடர்ந்து காலி முகத்திடல் பகுதியில் திரண்ட மஹிந்த ஆதரவாளர்கள், அவர் பிரதமர் பதவியில் நீடிக்க வேண்டும் என்றும் பதவி விலக வேண்டாம் என்றும் குரல் கொடுத்தனர்.

இதற்கு மத்தியில் பிரதமர் மஹிந்த அனுப்பியுள்ள ராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகவே ஏற்றுகொண்டதுடன் அதனை வர்ாமானியிலும் வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி.

ஜனாதிபதி ராஜிநாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டதால், நாட்டில் நீடித்து வரும் அமைதியின்மையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் மஹிந்த இடத்தில் வேறு யாரை ஜனாதிபதி நியமிக்கப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது. இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக ஏற்கெனவே வார இறுதியில் அமைச்சரவையுடன் ஜனாதிபதி ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதன்படி புதிய இடைக்கால அமைச்சரவையில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் பங்ளிப்பு இருக்குமா அல்லது எத்தகைய ஏற்பாடுகளை கோட்டாபய மேற்கொள்வார் என்பதும் தெளிவற்று இருப்பதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.









# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................
ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.
..............................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.
i) 122 , 124 , 126 , .............. , ............
ii) 18 , 15 , 12 , .............. , ............

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.
..............................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.
..............................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?
..............................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?
..............................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..............................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |



27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.
..............................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?
..............................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?
.............................. (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?
1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6 2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130 2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 1l 100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190 2) 100 3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2

## கல்வி tv CHANNEL-1

**04.05.2022 புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**04.05.2022 புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு





## முன்னாள் எம்.பி. பியசேனவின் வீட்டுக்கு முன்னால் ரயர் எரிப்பு

அம்பாறை, மே 11

அக்கரைப்பற்றில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேனாவின் வீட்டுக்கு முன்னால் ரயர் தீயிட்டு எரிப்புச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றதோடு, அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

காலி முகத்திடலில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் காரியாலயங்களை போராட்டக்காரர்கள் தீ வைத்து சேதப்படுத்தியிருந்தனர்.

அக்கரைப்பற்று சாகாம வீதியிலுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொது ஜன பெரமுன கட்சியின் அமைப்பாளருமான பொடியப்பு பியசேனவின் வீட்டுக்கு முன்னாள் சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு ஒன்று திரண்ட இளைஞர்கள் வீதியில் ரயர்களை போட்டு தீயிட்டதையடுத்து அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் தீயை அணைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன் அங்கு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# திருமலை கடற்படைத்தளத்தை நேற்று முற்றுகையிட்ட மக்கள்!

### மஹிந்த பதுங்கியுள்ளார் என தகவல் பரவியதை அடுத்து





**திருமலை, மே 11**

**திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு முன்னால் நேற்றுக் காலை பெருந்திரளான மக்கள் ஒன்று திரண்டு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.**

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலை உக்கிரமடைந்ததை அடுத்து நேற்று முன்தினம் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிவியில் இருந்து இராஜினாமா செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையை விட்டு வெளியேறியிருந்தார்.

இந்த நிலையில் அவர் திருகோணமலை வழியாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இதனை அடுத்து திருகோணமலை கடற்படைத்தளத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் பதுங்கி இருக்கலாம் என தெரிவித்து அங்கு குழுமிய மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# தோணிக்கு தீ வைப்பு

மட்டக்களப்பு, மே 11

பெரியநீலாவணை கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான கரைவலைத் தோணி ஒன்று, இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

பெரியநீலாவணையை சேர்ந்த சிவலிங்கம் தனுஜன் என்பவருக்கு செந்தமான தோணியே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தோணி தீப்பற்றி எரிவதைக் கண்டவர்கள், அதன் உரிமையாளரின் வீட்டுக்குச் சென்று தகவல் தெரிவித்துள்ளனர். தனது உறவினர்களின் உதவியுடன் கடற்கரைக்கு விரைந்த தோணி உரிமையாளர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

இது தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை முறைப்பாடுகளை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் தோணிக்கு அருகிலிருந்த மீன்பிடி உபகரணங்கள் பல முழுமையாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன், கரைவலை மீன்



பிடித் தொழிலில் ஈடுபடும் சுமார் 100 மீனவர் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. (அ)



## முன்னாள் அமைச்சர் வீட்டின் மீது கல் வீச்சு

மட்டக்களப்பு, மே 11

காத்தான்குடியில் முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டின் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காத்தான்குடி 3ஆம் குறிச்சி ஊர்வீதியிலுள்ள முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் மாலை மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தபோது இந்த கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த தாக்குதலினால் வீட்டின் முற்பகுதியிலுள்ள ஜன்னல் கண்ணாடியொன்று உடைந்துள்ளது.

இதனையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

### காலிமுகத்திடல் தாக்குதலை கண்டித்து

## கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்



மட்டக்களப்பு, மே 11

காலிமுகத்திடலில் கோட்டாகோ கம மீது இடம்பெற்ற தாக்குதலை கண்டித்து மட்டக்களப்பு - ஊறணி சந்தியில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து ஊறணி சந்தியில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு, காலி முகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து பல்வேறு வசனங்கள்

கொண்ட பதாதைகளை ஏந்தியவாறு, கோசங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊறணிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக ஆரம்பித்து பிள்ளையாரடி வரை சென்று அங்கு சுமார் அரை மணி நேரம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து

ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அந்த பகுதியில் இருக்கும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்குள் ஆர்ப்பாட்காரர்கள் நுழைவார்கள் என்ற அச்சத்தையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதை கஞ்சி வழங்கி கொண்டாடினர் மக்கள்

அம்பாறை, மே 11

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகியமையை கொண்டாடும் முகமாக நிந்தவூர் மஸ்ஜிதுர் ரஹ்மானியா பள்ளிவாசல் மஹல்லா வாசிகளால் கஞ்சி - பாயாசம் செய்து மக்களுக்குப் பருக கொடுக்கப்பட்டது.

நேற்று காலை ரஹ்மானியா பள்ளிவாசலுக்கு முன்னால் அப்பள்ளிவாசல் மஹல்லா நலன்



விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வின் போது வீதியால் பயணித்த மற்றும் மஹல்லாவாசிகள் முதலானோருக்கு பாயாசம் வழங்கப்பட்டன. (அ)



# உக்ரைன் மீதான போர் மிகவும் அவசியமானது

## ரஷ்ய ஜனாதிபதி தெரிவிப்பு

மொஸ்கோ, மே 11

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கை மிகஅவசியமானது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரு மாதங்கள் கடந்துள்ளன. இந்நிலையில், இரண்டாம் உலகப் போரின் 77ஆவது ஆண்டு வெற்றிப் பேரணி மொஸ்கோவில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில், உரையாற்றிய அவர், தங்கள் நாட்டு எல்லையில் எழுந்துள்ள அபாயத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அதனால் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கை சரியான நேரத்தில் நடத்தப்பட்ட அவசியமான ஒன்றாகும். மேற்குலக நாடுகளின் கொள்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்தத் தாக்குதலை நடத்த வேண்டிய கட்டாயம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டது எனவும் அவர் கூறினார். (ஐ)

## போரால் சிகிச்சை இல்லை:

# நாள்பட்ட நோய் காரணமாக 3,000 உக்ரேனியர்கள் மரணம்!

கீவ், மே 11

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாள்பட்ட நோய்களுக்கு உரிய சிகிச்சை பெற முடியாமல் சுமார் 3,000 உக்ரேனியர்கள் இறந்தனர் என்று உலக சுகாதார அமைப்பு நேற்று தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் போர் காரணமாக உக்ரைனில் சுகாதார சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவை மையங்கள்மீது இது வரை ரஷ்யா 200 தாக்குதல்களை நடத்தியுள்ளது என உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய பணிப்பாளர் ஹான்ஸ் க்ளூக் தெரிவித்தார்.

ஐ.நா. 53 உறுப்பு நாடுகள் மற்றும் உலக சுகாதார அமைப்பின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்திலேயே நேற்று அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

உக்ரைனில் உள்ள 40வீதமான



குடும்பங்களில் குறைந்தபட்சம் ஒருவராவது நாள்பட்ட நோய்களுக்கு சிகிச்சை தேவைப்படுபவராக உள்ளார். ஆனால், தற்போதைய சூழலில் அவர்கள் சுகாதார சேவைகளை அணுக முடியாதுள்ளனர். இதன் விளைவாக குறைந்தது 3,000 தவிர்க்கக்கூடிய இறப்புகள் பதிவாகியுள்ளன என்ற மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக எச்.ஐ.வி. மற்றும் புற்று நோயாளர்கள் உரிய சிகிச்சையின்றி உயிரிழந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மருத்துவமனைகள் மீதான ரஷ்யாவின் தாக்குதல் போர்க்குற்றம் எனத் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு அதிகாரிகள், போர்க்குற்ற விசாரணைக்கான ஆதாரங்களை சேகரித்து வருவதாகவும் கூறினர். (ஐ)

# கார்கீவில் எறிகணை வீச்சு; கட்டடத்தில் 400 உடல்கள் மீட்பு

கீவ், மே 11

உக்ரைனின் கார்கீவ் நகரம் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திய பகுதியில் ஒரு கட்டடத்திலிருந்து 400 உடல்கள் மீட்கப்பட்டன என்று அந்த நகரின் முதல்வர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்மீது கடந்த இரு மாதங்களுக்கு மேலாக ரஷ்யா தாக்குதல் நடத்துகிறது. இதில், முக்கிய நகரங்களில் ஒன்றான கார்கீவ் நகரை கைப்பற்ற மார்ச் மாதம்முதல் கடும் போர் நடக்கிறது.

இந்நிலையில், கார்கீவ் நகரில் கடந்த சில நாட்களில் ரஷ்யா தொடர்ச்சியான எறிகணை தாக்குதல்களை நடத்தியது. இந்தப் பகுதியிலேயே கட்டடம் ஒன்றிலிருந்து 400 உடல்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பாவி பொதுமக்களுக்கு எதிராக ரஷ்ய படைகள் நடத்திய



மற்றுமொரு கொடூரமான போர்க் குற்றம் இது என்று அந்த நகரின் முதல்வர் தனது சமூகவலைத் தளத்தில் தெரிவித்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# சிறையில் கலவரம் 44 கைதிகள் மரணம்!

ஈக்குவடோர், மே 11

ஈக்குவடோர் நாட்டின் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 40இற்கும் மேற்பட்ட கைதிகள் உயிரிழந்தனர்.

அந்நாட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் அடிக்கடி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சான்டா டொமிங்கா நகரில் உள்ள சிறையில் கைதிகளுக்கு இடையே கோஷ்டி மோதல் ஏற்பட்டு, கலவரமாகியது. இதில், 43 கைதிகள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 26ஆவது தடவையாக எவரெஸ்டில் ஏறி சாதனை!

காத்மாண்ட், மே 11

நேபாளத்தில் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 52 வயதான நபர் உலகின் மிகப்பெரிய மலைச் சிகரமான எவரெஸ்ட்டில் 26ஆவது முறையாக ஏறி சாதனை படைத்துள்ளார்.

உலகின் எட்டு உயரமான மலைச் சிகரங்கள் நேபாளத்தில் உள்ளன. கொரோனா பரவல் காரணமாக இங்கு மலையேற்ற வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு முதல் மலைச் சிகரங்களில் ஏற அவர்கள் மீண்டும் அனுமதிக்கப்பட்டனர். உலகின் மிக உயரமான மலைச் சிகரமான எவரெஸ்ட்டில் ஏற 316 பேருக்கு நேபாள அரசு இந்த ஆண்டு அனுமதி வழங்கி உள்ளது.

இந்நிலையில் நேபாளத்தைச் சேர்ந்த கமி ரீட்டா 52, என்பவர் எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் 26ஆவது முறையாக ஏறி தன் பழைய சாதனையை முறியடித்துள்ளார். இவர் “ஷெர்பா” எனப்படும் இமயமலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர். கமி ரீட்டா உட்பட 11 பேர் அடங்கிய குழு சனிக்கிழமை 8,848 மீற்றர் உயரமான எவரெஸ்ட் மலைச் சிகரத்தின் உச்சியை அடைந்தனர். (ஐ)



# வடகொரியாவுக்கு உதவ தயார் அணு ஆயுதத்தை கைவிடுங்கள்!

## தென்கொரியாவின் புதிய தலைவர் அறிவிப்பு

சியோல், மே 11

வடகொரியாவின் ஆயுதத் திட்டங்கள் அச்சுறுத்தலாக உள்ளன. அணு ஆயுதங்களை முழுவதுமாக வடகொரியா கைவிட வேண்டும் என்று தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாக நேற்று பதவியேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவிதார்.

இதன்போது “வடகொரியாவின் ஆயுதத் திட்டங்கள் அச்சுறுத்தலாக உள்ளன. அணு ஆயுதங்களை முழு



வதுமாக வடகொரியா கைவிட வேண்டும். அப்படி செய்தால் வடகொரியாவுக்கு ஆதரவு அளிப்போம்.

மேலும், வடகொரியாவின் பொருளாதாரத்தை பெரிதும் வலுப்படுத்தும் துணிச்சலான திட்டத்தை முன்வைக்க சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம். இதன்மூலம் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும்” என்றார்.

இதேவேளையில், வடகொரியா தாக்குதலுக்கு முற்பட்டால், தேவைப்பட்டால் முன்கூட்டியே தாக்குதல் நடத்தப்படும் எனவும் அவர் எச்சரித்திருந்தார். (ஐ)

# இலங்கை - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் இரத்து

கொழும்பு, மே 11

இலங்கை - பாகிஸ்தான் அணிகள் இடையே ஜூலையில் நடைபெறவிருந்த 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் இரத்து செய்யப்பட்டுள்ளது.

எனினும், இரு அணிகளிடையேயான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ள சரியான திகதிகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இரு அணிகளுக்கும் இடையிலான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர், சுப்பர் லீக்குடன் தொடர்புபடாததால் அதனை இரத்து செய்ய தீர்மானித்ததாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.

எதிர்கால சுற்றுப்பயண திட்டத்தில் 3 போட்டிகள் கொண்ட தொடர் இணைக்கபட்டிருந்தது. ஆனால், இந்த வருட இறுதிப் பகுதியில் இருபது - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவிருப்பதால் அதற்கு முன்னர் வீரர்கள் அதிர்ச்சிக்குள்ளாகலாம் என்பது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை கவலை கொண்டுள்ளது.

மேலும் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் மூவகை கிரிக்கெட் தொடர்கள் ஜூன் மாதம் இங்கு நடைபெறவுள்ளதாலும் ஓகஸ்ட் மாதம் அளவில் லங்கா பிரீமியர் லீக் இருபது- 20 கிரிக்கெட் போட்டிகளும் செப்ரெம்பரில் ஆசிய கிண்ண இருபது - 20 கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறவுள்ளதாலும் பாகிஸ்தானுடான ஒருநாள் தொடரை இரத்து செய்வதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கையும் பாகிஸ்தானும் கடைசியாக டெஸ்ட் தொடரில் 2019இல் விளையாடின. லாகூரில் 2009ஆம் ஆண்டு இலங்கை அணியினர்மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் பாகிஸ்தானில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் தொடர அதுவாகும்.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



# கொல்கத்தாவிடம் வீழ்ந்தது மும்பை!

மும்பை, மே 10

மும்பை இந்தியன்ஸ் அணியை 52 ஓட்டங்களால் வெற்றி கொண்டது வெற்றி கொண்டது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

ஐ. பி. எல்லின் 56ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் நிர்ணயித்த 166 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் 17.3 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதற்கமைய இந்த போட்டி உட்பட கடந்த 4 ஐ.பி.எல். போட்டிகளில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய அணிகள் குறைந்த எண்ணிக்கைகளுக்கு ஆட்டமிழந்ததை அவதானிக்கலாம். மும்பை அணித் தலைவர் ரோஹித் ஷர்மா துடுப்பாட்டத்தில் மீண்டும் சொதப்பினார். அத்துடன், நான்கு பேர் தவிர்ந்த ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்க எண்ணிக்கையைக் கடக்கத் தவறினர்.

இஷான் கிஷன் மாத்திரமே நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி 51 ஓட்டங்களை அதிகப்பட்சமாக பெற்றார். இவரை விட கிரன் பொலார்ட் (15), ரிம் டேவிட் (13), ராமன்தீப் சிங் (12) ஆகிய மூவரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

பந்துவீச்சில் பட் கம்மின்ஸ் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அந்த்ரே ரசல் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ரிம் சௌதி 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வருண் சக்கரவர்த்தி 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

வெங்கடேஷ் ஐயர், அஜின்கியா ரஹானே ஆகிய இருவரும் 34 பந்துகளில் 60 ஓட்டங்களை வேகமாகப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர். அவர்கள் இருவரையும் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குமார் கார்த்திகேயா ஆட்டமிழக்கச் செய்தார். வெங்கடேஷ் ஐயர் 43 ஓட்டங்களையும் அஜின்கியா ரஹானே 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து அணித் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் (6), அந்த்ரே ரசல் (6) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எனினும் 3ஆம் இலக்க வீரர் நித்திஷ் ராணா 43 ஓட்டங்களைப் பெற்று பும்ராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இந்த மூவரும் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்தனர்.

ரின்கு சிங் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பும்ரா 6ஆவது விக்கெட்டை வீழ்த்தி ஐ.பி.எல். வரலாற்றில் அதி சிறந்த பந்துவிச்சைப் பதிவு செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பும்ரா வீசிய 20ஆவது ஓவரின் முதல் 5 பந்துகளை ரின்கு சிங் சமாளித்ததுடன் ஓட்டம் பெற வாய்ப்பிருந்தும் ஓட்டம் பெறுவதைத் தவிர்த்தார். கடைசிப் பந்தில் ஓர் ஓட்டத்தைப் பெற்ற ரின்கு சிங், பும்ராவுக்கு அதிசிறந்த பந்துவீச்சு சாதனை சொந்தமாக விடாமல் செய்தார்.

மும்பை இந்தியன்ஸ் சார்பாக மிகவும் துல்லியமாகப் பந்துவீசிய பும்ரா, ஓர்ஓட்டமற்ற ஓவர் உட்பட 4 ஓவர்களில் 10 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். இதில் 3 விக்கெட்களை அவர் தனது 3ஆவது ஓவரிலேயே வீழ்த்தினார். இந்த பந்துவீச்சுப் பெறுதியே இருபது 20 கிரிக்கெட் போட்டிகளில் பும்ராவின் அதிசிறந்த பந்துவீச்சு பெறுதி ஆகும்.

# இந்திய அணியின் தலைவராக நானே இருந்திருக்க வேண்டும்!

## யுவராஜ் சிங் மனம்திறப்பு

புதுடில்லி, மே 11

இந்திய அணியின் தலைவராக நான்தான் இருந்திருக்க வேண்டும். சேப்பல் தலையீடு காரணமாக டோனி நியமிக்கப்பட்டார் என தெரிவித்துள்ளார் முன்னாள் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்.

இந்திய கிரிக்கெட் அணி 2011 உலகக்கிண்ணத்தை வெல்ல பிரதான காரணமாக அமைந்தவர் யுவராஜ் சிங். சகலதுறை வீரரான அவரின் ஆட்டம் இந்தியாவுக்கு பெரிதும் உதவியது. இந்தியாவுக்காக டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது - 20 என சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 402 போட்டிகளில் விளையாடி, 11,778 ஓட்டங்கள் எடுத்தவர். 21ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணியில் அறிமுகமானார். அன்று தொடங்கி சுமார் 17 ஆண்டுகள் நாட்டுக்காக விளையாடி இருந்தார் யுவராஜ்.

“2007 இருபது - 20 உலகக் கிண்ணத்தின்போது நான்தான் அணியின் தலைவராக இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்போதைய பயிற்றுவிப்பாளர் சேப்பல் விவகாரத்தில் நான் சக அணி வீரருக்கு ஆதரவாக நின்றேன். அது பலருக்கு பிடிக்கவில்லை. அதன் காரணமாக அந்த வாய்ப்பு கைகூடாமல் போனது. அப்போது என்னை தவிர யாரை வேண்டுமானாலும் அணியின் தலைவராக நியமிக்கப்படலாம் என்பது எனது காதுக்கு வந்தது.

அணியின் உபதலைவராக அப்போது நான் இருந்தேன். ஆனால், திடீரென டோனி தலைவராக நியமிக்கப்பட்டார். இன்றுகூட சேப்பல் விவகாரம் மாதிரியான சூழல் வந்தால் சக அணி வீரருக்கு தான் எனது ஆதரவு இருக்கும்” என யுவராஜ் தெரிவித்துள்ளார்.

2007 இருபது - 20 உலகக் கிண்ண டோனி தலைமையிலான அணி வென்றது. அந்த தொடரில் மூத்த வீரர்கள் பங்கேற்காமல் விலகினர். யுவராஜ் இந்த தொடரில் தான் ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்களை விளாசி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் ஆன்ஸ் ஷாபிர் சம்பியன்!

மட்ரிட், மே 11

ஸ்பெயினில் நடைபெறும் மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் துனீசியாவின் ஆன்ஸ் ஷாபிர் சம்பியனானார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த இறுதிப் போட்டியில் 8ஆவது இடத்திலிருந்த அவர் 7-5, 0-6, 6-2 என்ற செற்களில் 12ஆவது இடத்திலிருந்த அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலாவை தோற்கடித்தார். இதன் மூலம் 1000 புள்ளிகள் கொண்ட டபிள்யு. ரி. ஏ போட்டியில் பட்டம் வென்ற முதல் அராபிய வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

களிமண் தரையில் நடைபெற்ற இப்போட்டியில் ஆதிக்கம் செலுத்தியிருக்கும் ஷாபிர், அதே போன்ற களத்தில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ்சு ஓபனிலும் பட்டம் வெல்லும் வாய்ப்புள்ள முக்கிய போட்டியாளராக உருமாறியுள்ளார். (ஐ)



## மத்திய வங்கி ஆளுநருடன் சஜித் அவசரமாக சந்திப்பு

கொழும்பு, மே 11

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் திறைசேரியின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தனவும் உடனிருந்தாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இது தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த நெருக்கடியை சமாளிக்க தனது கட்சி எப்போதும் ஆதரவை வழங்கு மெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது ருவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நாட்டை சீரழித்தவர்களை நாம் தப்பவிடமாட்டோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, மே 11

**நாட்டை முழுமையாக சீரழித்தபின் பொறுப்பை எம்மிடம் கையளித்து விட்டு இலகுவாக தப்பித்து விடலாம் என்று எவரும் எண்ண கூடாது. இவ்வாறான சந்தர்ப்பவாத, சம்பிரதாய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அரசியல் மறுசீரமைப்புக்கு செல்லவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் தமது தவறுகளை ஏற்றுக் கொண்டனர். உண்மையில் அது வரவேற்கத்தக்கது. எனினும் தற்போது பாவ மன்னிப்பு கேட்பது பிரயோசனமற்றது. மன்னிப்பு வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக மக்களின் பணம் வீண் விரயமாக்கப்பட்டுள்ளது. முழு நாட்டையும் சீர்குலைத்து விட்டு தற்போது எம்மை பொறுப்பேற்குமாறு கூறு



கின்றனர்.

நாட்டை தற்போதுள்ள நிலைமையிலிருந்து கட்டியெழுப்புவதற்குச் செல்லும் பாதை அழகானதல்ல. மிகவும் கடினமானதாகும். எவ்வாறிருப்பினும் அந்த சவாலை ஏற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது. எனினும் அரச தலைவரை மக்கள் ஜனநாயக முறைமையில் தேர்தல் ஊடாகவே தெரிவு செய்ய வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் , சம்பிரதாய அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். வெறுமனே பதவிகளிலிருந்து விலகி எம்மிடம் பொறுப்பை கையளித்துவிட்டு இலகுவாக தப்பித்து விட முடியாது. பொருளாதார மறுசீரமைப் பிற்கு முன்னர் அரசியல் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டும்.

நாம் தற்போது மேற்குலக நாடுகளை பகைத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தியா மற்றும் சீனா என்பன எம்மை சந்தேகத்துடனேயே பார்க்கின்றன.

சர்வதேச நாடுகளுடனான உறவை சுமூகமானதாகக் கட்டியெழுப்ப வேண்டும்-என்றார். (அ)



## யாழில் அரசு தரப்பு எம்.பிக்களின் அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், மே 11

நாடு முழுவதும் அரசு ஆதரவு எம்.பிக்களின் வீடுகள், அலுவலகங்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் அரசு ஆதரவு எம்.பிக்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதனின் அலுவலகங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களுக்கு அருகில் பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ)

# கோட்டாவின் கீழ் இடைக்கால அரசா?

## ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் அமையும் இடைக்கால அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஆகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஐக்கிய மக்கள் சக்தி இணையாது என்றும் அவர் கூறினார்.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதேநேரம் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கப் பதவிகளை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வன்முறை குறித்து முழு விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் பணிப்பு

கொழும்பு, மே 11

நேற்று முன் தினம் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு சட்ட மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு எழுதிய கடிதத்தில், சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

“சம்பந்தப்பட்ட சம்பவங்களின் தீவிர தன்மையைக் கருத்தில் கொண்டு, மக்களின் அரசியலமைப்பு உரிமைகளில் சட்டவிரோதமாக தலையிடும் சம்பவங்கள் குறித்து முழு அளவிலான விசாரணைகளை நடத்துமாறு நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்.

இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் நாட்டின் தண்டனைச் சட்டங்களை மீறும் வகையில் ஒரு பெரிய குழுவினரால் அமைதியான முறையில் நடைபெற்ற போராட்டங்களில் தலையிடப்பட்டுள்ளது” என்று சட்டமா அதிபர் சஞ்ஜய் ராஜரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமான தலையீடு அவர்களின் அரசியலமைப்புச் சுதந்திரங்களைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டவர்களுக்கு உடல் காயத்தை ஏற்படுத்தும் தீவிர இயல்புடைய உடல் ரீதியான தாக்குதல் வடிவில் மேற்கொள்ளப்பட்டதாகக் காணப்பட்டது என்று சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“பெருநகர கொழும்பில் இடம்பெற்ற சம்பவங்கள், நாடு முழுவதிலும் உள்ள மக்கள் மற்றும் அவர்களது உடைமைகளை உள்ளடக்கிய தீவிர இயல்புடைய வன்முறைச் செயல்களைத் தூண்டிவிட்டதால், மே 9ஆம் திகதிய சம்பவங்களின் பின்விளைவுகளை விசாரிக்கப் படவேண்டும்.

இந்தச் சம்பவங்களைச் சுற்றியுள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, அவசர முன்னுரிமை அடிப்படையில் விசாரணைகளை முடிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று சட்ட மா அதிபர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதேவேளை, அலரிமாளிகைக்கு வந்த சிலர், மைனகோகம மற்றும் கோத் தாகோகமவில் போராட்டத் தில் ஈடுபட்டோரை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தியமை தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் பொலிஸ் மா அதிபர் ஒப்படைத்துள்ளார். உடனடியாக விசாரணை களை ஆரம்பித்து தேவையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு பொலிஸ்மா அதிபர் நேற்று உத்தரவிட்டுள்ளார். (அ)

# 58 கைதிகளை காணவில்லை

கொழும்பு, மே 11

புனர்வாழ்வு வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டட நிர்மாணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 58 கைதிகள் காணாமல்போயுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த கைதிகள் வட்டரெக்க சிறைச்சாலைக்கு திரும்பிக் கொண்டிருந்த நிலையில் இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

சிறைச்சாலை பஸ்ஸின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்திய நிலையில், இந்த காணாமல்போன சம்பவம் நடந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் எச்.எம்.டி.என். உபுல்தெனிய கூறியுள்ளார்.

அதேவேளை கொழும்பு காலிமுகத் திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக அழைத்து வரப்பட்டதாக கூறப்படும் கைதிகள் சிலரை இளைஞர்கள் பிடித்து தாக்குதல் நடத்தியிருந்தனர்.

வட்டரெக்க சிறைச்சாலையில் இரண்டு ஆண்டு புனர்வாழ்வு பயிற்சியை பெற்று வருவதாகவும் கட்டட நிர்மாணப் பணியிடங்களில் வேலைக்காக தாம் அழைத்து வரப்படுவதாகவும் கைதிகள் கூறியுள்ளனர்.

அத்துடன் சிறைச்சாலை அத்தியட்சகர் ரத்நாயக்க தம்மை அழைத்து வந்ததாக கைதிகள் தெரிவித்தனர். (அ)

## தவறான...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், 43 ஆம் படையணியின் ஸ்தாபகத் தலைவருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் நிகழ்வில் பங்கேற்றிருந்த சம்பிக்க ரணவக்க, நாட்டில் ஏற்பட்ட சம்பவத்துக்கு மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

“ அமைதிவழியில் தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருந்த பிரச்சினையை, தனது திமிர்தனத்தால் வன்முறைமூலம் தீர்க்க மஹிந்த ராஜபக்ச முற்பட்டதாலேயே, நாட்டில் இன்று சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.” எனவும் சம்பிக்க குறிப்பிட்டார்.

“மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசியல் அனுபவம் இருப்பதால், பேர்டினண்ட் மார்கோஸ்போல அமைதியாக வெளியேறுமாறு நான் கோரியிருந்தேன். அவ்வாறு இல்லாமால் கடாபி போல் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டால், இறுதியில் அந்த வன்முறைப்பொறிக்குள்ளேயே சிக்க நேரிடும் எனவும் சுட்டிக் காட்டிருந்தேன்.

இவ்விவகாரத்தில் மஹிந்த மதிநுட்பத்துடன் செயற்படவில்லை. தவறான வழியையே தேர்வு செய்திருந்தார். அதன் விளைவாகவே பேரவாவி, நந்திக்கடலாக மாறியது. “ எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை , பிரதமர் பதவியை ஏற்பதற்கு தான் தயாரென அறிவித்த சம்பிக்க ரணவக்க, அதற்காக ஒரிரு நிபந்தனைகளையும் முன்வைத்தார்.

-பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகள் ஒன்றிணைந்து, பொதுவானதொரு வேலைத்திட்டத்துக்கு வந்தால் -

- வீடு, வாகனம், கொடுப்பனவு என எவ்வித வரப்பிரதாசங்களையும் அனுபவிக்காமல், நாட்டுக்கு சேவையாற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்தால் -

-இலங்கை மத்திய வங்கி, மின்சார சபை உள்ளிட்ட துறைகள் தொழில்சார் நிபுணர்களின் பயங்களிபுடன் இயங்கினால் -

-அதேபோல ஆன்மீகத் தலைவர்கள், சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதிகள், போராட்டக்காரர்கள் எமது நடவடிக்கையை கண்காணிக்க முன்வந்தால் - எந்தவொரு சவாலையும் ஏற்க தயார் என்றார் சம்பிக்க ரணவக்க. (அ)

## அதிபர்கள்,...

ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கத்தின் உபதலைவர் ஆ. தீபன் திலீசன் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், காலிமுகத்திடல் போராட்டம் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு, இதன் மூலம் முழுமையான இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கிலேயே கோட்டாபய அரசாங்கம் செயல்படுகிறது.

தமது ஆட்சிக்கான அதிகார போதையில், சிங்கள மக்களுக்கு பொய்களைக் கூறிய ஆட்சியாளர்கள் - தமிழினத்தை இனவழிப்பு செய்து - இன்று தன் சொந்த இனத்தின் ஜனநாயக போராட்டங்களையே நசுக்க முனைந்து, பெரும் வன்முறைச் சம்பவங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

கட்டுமீறிய இன்றைய சூழலில், இந்த கொலைகார, ஊழல், அடக்குமுறை ஆட்சியாளர்கள் மக்கள் மட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்ட அரசாங்கம் அகற்றப்படும் வரையில் அனைத்து தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தத்தை தொடரவுள்ளோம்.

இதன்படி அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் மே 10 ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்பதையும் - பணிப்பகிஸ்கரிப்பின் போது, லீவு தொடர்பாக விண்ணப்பிக்கவோ அல்லது விடுப்பு குறித்து அறிவிக்கவோ வேண்டியதில்லை என்பதையும் அறியத்தருகின்றோம்.

எனவே, அதிபர், ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள். இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் சமயோசிதமாக செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ-3)

## நாட்டில்...

களுக்கு சொந்தமான 38 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதேபோல, வன்முறையாளர்களால் 88 வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இவற்றில் 47 வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

காலிமுகத்திடலில் அமைதிவழியில் தொடர்ந்த போராட்டத்தில் அரச ஆதரவாளர்கள் கும்பல் வன்முறையை தொடங்கியது. இதையடுத்து, நாடு முழுவதும் வன்முறைகள் ஆரம்பித்தன. இவ்வாறு ஆரம்பித்த வன்முறைகளில், நேற்று மதியம் வரையான நிலவரப்படி, ஒரு பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச சபை தவிசாளர், இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 250இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் 232 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் - அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் மருத்துவமனையின் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம், ஆளும் கட்சி உறுப்பினர்களின் வீடுகள், அவர்களுக்கு சொந்தமான அலுவலகங்கள், கட்டடங்கள் என்பன சேதப்படுத்தப்பட்டன. இவற்றில் முன்னாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகளுக்கு சொந்தமான 38 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதில், ராஜபக்ஷ குடும்பத்துக்கு சொந்தமான பரம்பரை வீடு, மஹிந்த ராஜபக்ஷ், பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளும் அடங்கும். (ஐ)

## சொத்துக்களை...

பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்னடி, பொது சொத்துக்களை அழிக்கும் - கொள்ளையடிக்கும் எவரையும் சுடுவதற்கு முப்படையினருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த இரு நாட்களாக கும்பல்கள், பொதுச் சொத்துக்களையும், ஆளும் கட்சியின் அரசியல்வாதிகளின் சொத்துக்களையும் தாக்கி அழித்தனர். அத்துடன், தனிநபர்களையும் அவர்கள் தாக்கினர்.

இந்தக் கும்பல்களால் அழிக்கப்பட்ட சொத்துக்களில் ராஜபக்ஷ குடும்பத்துக்கு சொந்தமான சொத்துக்களும் அடங்கும்.

காலிமுகத்திடலில் அமைதி வழியில் தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தின்மீது நடத்தப்பட்ட வன்முறைகளை தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கும்பல்களால் சொத்துக்கள் தாக்கப்பட்டு - தீக்கிரையாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைதிக்கு...

தெரிவித்த கர்தினால் மல்கம் ரஞ்சித், “எங்கள் மதக் கோட்பாடுகளின்படி வன்முறையில் ஈடுபடாமல் அமைதியான முறையில் பதிலளிக்குமாறு நாம் மக்களை கேட்டுக் கொள்கிறோம். வன்முறையற்ற முறையில் செயல்பட வேண்டும். மக்களை தாக்கக்கூடாது.

நாகரிக மற்றும் ஜனநாயக நாட்டில் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டித்தனமான செயல்களை கடுமையாகக் கண்டிக்கிறோம்.”, என்றார்.

இதேசமயம், அங்கு கருத்துரைத்த ஓமல்பே சோபித தேரர், “மக்கள் சட்டத்தை மதிக்க வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட அனைத்து ராஜபக்ஷக்களும் பதவியை விட்டு வெளியேற வேண்டும்.”, என்று வலியுறுத்தினார். (ஐ)

# வன்முறை வேண்டாம்!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, மே. 11

“எவரும் வன்முறையில் ஈடுபட வேண்டாம். ஜனநாயக உரிமைகளுக்காக அறவழியில் போராடுவோம்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த அவர்,

“அறவழியில் போராடியவர்கள் மீது ராஜபக்ஷ பயங்கரவாதம் கொலைவெறித் தாக்குதலை நடத்தியது. இதனுடன் தொடர்புபட்ட வன்முறையாளர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அதனை நாம் செய்வோம்.

வன்முறைகள் வேண்டாம். எமது நாடு வன்முறைகளால்தான் பின்நோக்கிச் சென்றுள்ளது. சொத்துகளுக்கு சேதம் விளைவிக்க வேண்டாம். நபர்களை தாக்க வேண்டாம். ராஜபக்ஷ பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்ககூடாது. அமைதியாக இருக்கவும். உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் போராடுவோம்.” - என்றார்.

அதேவேளை, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உட்பட பிரதான கட்சிகளின் அரசியல் தலைவர்களும், ஆன்மீக தலைவர்களும், எவரும் வன்முறையில் ஈடுபடவேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# மேல் மாகாணத்தின் டி. ஐ. ஜி. மீது தாக்குதல்!

## இரு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 11

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் இரு சந்தேகநபர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்ய்பபட்டனர்.

கொழும்பு பெரஹரா மாவத்தையில் வைத்து உயர் பொலிஸ் அதிகாரி அவர் தாக்கப்பட்டார். அவரின் வாகனமும் சேதப்படுத்தப்பட்டது.

அவர் தாக்கப்படும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தன. பொல்லுகள், தடிகளுடன் மூத்த பிரதி பொலிஸ் மா அதிபரை சுற்றி வளைத்தவர்கள் தாக்குதலை நடத்தினர்.

எனினும், இந்தத் தாக்குதலில் அவருக்கு காயங்கள் ஏற்பட்டபோதிலும், அவை பாரதூரமானவை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இந்திய...

அரசியலமைப்புக்கு அமைவான பாதுகாப்பை மீள உறுதிப்படுத்துவதற்காக இந்தியா, இந்திய இராணுவத்தை அனுப்பவேண்டும் எனவும் இந்தியாவுக்கு எதிரான வெளிநாட்டு சக்திகள் மக்களின் ஆத்திரத்தை தமக்குச் சாதகமாக்கி வருவதாகவும் இது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## முல்லை...

மல் போயுள்ளனர்.

நண்பர்களுடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த சகோதரர்கள் மூவரும் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களை தேடும்பணி தொடர்ந்த போதும் நேற்றிரவு வரை எவரும் மீட்கப்படவில்லை. முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாட்டில் இராணுவ...

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக கடந்த சில வாரங்களாக அலரி மாளிகைக்கு அருகாமையிலும், கொழும்பு காலிமுகத்திடலிலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ருவிட்டரில் பதிவிட்டுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பொதுமக்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

“நீதி மற்றும் ஜனநாயக ஆட்சிக்காக அற்புதமான போராட்டத்தை நடத்தி வரும் அனைத்து குடிமக்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன், இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும் வகையில் வன்முறையைத் தூண்டுவதற்கு நாசகாரர்கள் பயன்படுத்தப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தயவு செய்து இதை நிறுத்த உங்கள் திறமையைப் பயன்படுத்தவும்” என அவர் பதிவிட்டுள்ளார். (அ)

## பழிவாங்கலை...

அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்து வருவதாக அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## உடைக்கப்பட்டது...

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட சகோதரர்களின் தந்தையே டி.ஏ. ராஜபக்ஷ.

அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களால் ராஜபக்ஷக்களின் பூர்வீக இல்லம் நேற்று முன்தினம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. டி.ஏ. ராஜபக்ஷவின் சமாதியும் நேற்று முன்தினம் தரைமட்டமாக்கப்பட்டது. இந்நிலையிலேயே நேற்று உருவச்சிலையும் உடைக்கப்பட்டுள்ளது. (அ)

## கட்சி தலைவர்கள்...

அத்துடன், இன்றைய தினம் நடைபெறவிருந்த கட்சித் தலைவர்களின் கூட்டமும் நிறுத்தப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கலவரத்தைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் - குறிப்பாக ஆளும் கட்சியை சேர்ந்தவர்களை தாக்கும் நோக்கில் தேடி வருகின்றனர். இதில் அரசியல்வாதிகளுக்கு சொந்தமான பல வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டன - எரிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே, பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வரை பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கீரி கடித்ததால்...

படுத்த பெண்ணின் மூளையை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்ப சட்ட மருத்துவ வல்லுநர் க.வாசுதேவா பணிந்துள்ளார்.

புலோலி ஆலடியைச் சேர்ந்த பாலசுந்தரம் மங்கையக்கரசி (வயது-69) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் வயோதிபப் பெண்ணுக்கு கீரி கடித்துள்ளது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். எனினும், அவருக்கு விலங்கு விசர் தடுப்பூசி மருந்து வழங்கப்படவில்லை. இந்த நிலையில் 3 மாதங்களின் பின் அவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்தார் என்று அறிய வருகின்றது. (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

# போராட்டங்களை இரும்புக்கரத்தால் அடக்குவதற்கு நினைக்கின்றது அரசு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 11

ஜனநாயக நாடு எனக் கூறிக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கம், போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குகின்றது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சமகால நிலை தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் போராட்டங்களை அடக்குவதை நோக்கமாகக் கொண்டு அவசரகாலச் சட்டம் பிறப்பித்துள்ளது. அவசரகாலச் சட்டத்தின் அடிப்படையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

பிரதமரை காப்பாற்றுவதாக திடீரென அலரி மாளிகை முன்பு கூடிய கும்பல்,பல நாட்களாக போராடிக்கொண்டிருந்த மக்கள் வெளியேறவேண்டும் என்று அடிதடியில் ஈடுபட்டனர். காலி முகத்திடல் போராட்ட களத்திலும் பிரச்னைகள் உருவாக்கப்படுகின்றன.

இதனை பார்க்கின்றபோது மிக விரைவாக காலி முகத்திடலில் உள்ள முழு போராட்டக்காரர்களையும் விரட்டியடித்து காலி முகத்திடலை மக்கள் போக்குவரத்தற்ற பிரதேசமாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன.

ஆகவே இந்த அவசரகாலச் சட்டத்தின் நோக்கம், இந்த போராட்டங்களை இல்லாமல் செய்து அரசாங்கம் தான் விரும்பியவாறு விடயங்களைக் கையாள்வதற்காக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தியது. ஆனால் ஜனநாயக நாடு எனக்கூறிக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கம், போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடங்குகின்றன.

அவசரகாலச் சட்டம் பிறப்பித்து இருக்கின்ற சூழ்நிலையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடத்துக்கு அரசுக்கு சாதகமான மற்றொரு போராட்டக் குழுவை அழைத்து வந்தமை பிரச்சினையை உருவாக்க அரசாங்கம் தீட்டிய திட்டமே தவிர வேறு எதுவுமே கிடையாது- என்றார். (அ)

# வெல்கமவின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை

கொழும்பு, மே 11

நாட்டில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைதியின்மையின்போது ஆத்திரமடைந்த பொதுமக்கள் குழுவினால் தாக்கப்பட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என அவரது சகோதரர் நளின் வெல்கம தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், தனது சகோதரர் பாதுகாப்புக் காரணங்களால் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பதாகவும் மற்றப்படி நலமாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

எந்தவொரு எலும்பு முறிவுகளும் இல்லை. வெறும் வெட்டுக் காயங்கள் மட்டுமே உள்ளன. அவர் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன் என்று அவர் தனது ருவிட்டர் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எங்களை தாக்கியவர்கள் மீது எந்த வெறுப்பும் இல்லை. அவர் தவறான நேரத்தில் தவறான இடத்தில் இருந்தார் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# நாட்டில் வன்முறை; உலக வங்கி கவலை

கொழும்பு, மே 11

இலங்கை வன்முறைகள், அபிவிருத்திப் பங்காளிகளின் இலக்குகளை அடைந்து கொள்ளும் நடவடிக்கைகளை மேலும்கடினமாக்கியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை, நேபாளம் மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பரிஸ் எச்.ஹடட் தமது ருவிட்டர் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் உடனடி பொருளாதார மீட்சியின் பாதையில் இவை தாக்கம் செலுத்துவதாகவும் அவர் தமது பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

# மொறட்டுவையில் 'சமன் லால் கோ கம'

கொழும்பு, மே 11

மொறட்டுவை மேயர் சமன் லால் பெர்னாண்டோவுக்கு எதிராக அப்பிரதேசத்தில் 'சமன் லால் கோ கம' அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி நாட்டில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# குற்றம்சாட்டப்பட்ட யாருமே தப்பியோட அனுமதியில்லை!

கொழும்பு, மே 11

குற்றஞ்சாட்டப்பட்ட எந்தவொரு நபரும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக தப்பிச் செல்ல முடியாது என குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)







# மரண அறிவித்தல்

**தோற்றம்** 16 - 11 - 1967



**உதிர்வு** 30 - 04 - 2022

## லிங்கம் ஐயாத்துரை

சுன்னாகம் கல்லாக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் South Harrow வை வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கம் ஐயாத்துரை அவர்கள் 30-04-2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா, புஸ்பம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,றொபினா அவர்களின் அன்புக் கணவரும், றெஜி, ஜோஸ்வா, ஜெனி, றெனி, ஜெரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஜோசப் அவர்களின் அன்பு மாமனாரும்,இசபெல், ஜோனா ஆகியோரின் அன்புப் பேரனும், சுசீலா, சிவானந்தஜோதி, தயாநிதி, ஜெயந்தி, ரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, மரியதாஸ், இராசதுரை, சிவநேசன், வனிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஜெயராணி, மோகன், குமார், ராயூ, பாஸ்கரன், தாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிறி, சாந்தி, ரதி, சுரேஜினி, புஸ்பா, மேர்ஸி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

**கிரியை**
Saturday, 14 May 2022 9:00 AM
North Harrow Methodist Church Pinner Rd, Harrow HA2 6EQ, United Kingdom

**நல்லடக்கம்**
Saturday, 14 May 2022 12:30 PM
Carpenders Park Lawn Cemetery Oxhey Ln, Watford WD19 5RL, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தாசன் (மைத்துனர்).**

தொடர்புகளுக்கு:
**மோகன் - மைத்துனர்** Mobile : +447944359257
**தாசன் - மைத்துனர்** Mobile : +447939195006
**குமார் - மைத்துனர்** Mobile : +33651270946
**காந்தன் - மருமகன்** Mobile : +94778248420

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 30 - 03 - 1956



**உதிர்வு** 05 - 05 - 2022

## இராசசிங்கம் புஷ்பராஜா

கரணவாயைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Versailles ஐ வதிவிடமாகவும் கொண்ட இராசசிங்கம் புஷ்பராஜா அவர்கள் 05.05.2022 வியாழக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற இராசசிங்கம், மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத் தையா, அம்மாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,கலாவாணி(மாலா) அவர்களின் பாசமிகு கணவரும்,அற்புதராஜா(கனடா), காலஞ்சென்ற வசந்தகுமாரி(இலங்கை), இந்திரகுமாரி(கனடா), காலஞ்சென்ற சிவராஜா(கனடா), விஜயராஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சோபனா, நிஷாந், தர்சாந், நர்சாந், சொப்னா, அஜிசாந்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சிவகுமார்(கிளி), கஜீவன், நதியா, சஜித்தா, லஸ்சி, நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும்,சினோஜா, சிவாஜன், சினோஜினி, சிசோறீ, அதர்சா, நிகில், நிக்சா, அகஸ் தியா, ஆயுஸ்மன், இசானி, இனஜா, இதிகாஷ்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Friday, 06 May 2022 3:30 PM - 4:30 PM
Saturday, 07 May 2022 3:30 PM - 4:30 PM
Sunday, 08 May 2022 3:30 PM - 4:30 PM
Monday, 09 May 2022 3:30 PM - 4:30 PM
Tuesday, 10 May 2022 3:30 PM - 4:30 PM
Wednesday, 11 May 2022 3:30 PM - 4:30 PM

கிரியை
Thursday, 12 May 2022 8:30 AM - 10:30 AM
PFG - SERVICES FUNÉRAIRES 15-17 Rue de la Prte de Buc, 78000 Versailles, France

தகனம்
Thursday, 12 May 2022 1:00 PM - 2:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**நிஷாந் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**விஜய் - சகோதரன்** Mobile : +33769911529
**நிஷாந் - மகன்** Mobile : +33771607035
**குமார்(கிளி) - மருமகன்** Mobile : +33612657353
**தர்சன் - மகன்** Mobile : +33622835114

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வனமகன்,சீமராஜா
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை




**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டை டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

